மாத்வ ப்ரதிக்ஞை

3

6

2-10-1933

N33.6
208709

266
வருட சந்தா
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1? OCT 1933

Rgd. No. M. 2419



# மாத்வமித்திரன்.



# The Madhwa Mitran.

Editor, Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.





| Vol 6 | ஸ்ரீமுக ஸம்வத்ஸரம் | No 3 |
|---|---|---|
| புஸ்தகம் 6 | ஆசுவீஜ மாஸம் பௌர்ணமி (2—10—33) | நெ 3 |





நெ பொருளடக்கம். பக்கம்

1. ஸ்ரீதாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) 65
2. ஸ்ரீவாதிராஜஸ்வாமிகள் சரித்திரம். 73
3. பீமசேன விஜயம். 77
4. சங்கரலீலாவிலாஸம். 81
5. மணிமஞ்ஜரி (ஸ்ரீநாராயணபண்டிதாசாரியார்) 85
6. ஆசாரமாலை: 89
7. வேதாந்த நுணுக்குகள். 91
8. செய்தித்திரட்டு 94
9. விசேஷதினங்கள். 96

ஆசிரியர்
பாகவத ரங்கநாதாசாரியார்.

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்,

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் சிலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறுதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணு 0—8—0 தபாற் கூலி அணு 0—1—0.

ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்:— தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணு 2. தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 0—5—0 தபாற்கூலி அணு ஒன்று.

துவைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணு 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணு 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணு 6. தபாற்கூலி அணு 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தொகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். ***Certificate of Posting*** பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீசு ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 OCT 1933

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत्, तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

ஸ்ரீமத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(பத்தொன்பதாவது அத்யாயம்.)

(காபிரைட்) முன் தொடர்ச்சி.

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு.)

---

### அரக்கு மாளிகைகருத் தீ வைத்தது.

---

பிறகு விதுரர் தர்மபுத்திரரைப்பார்த்து குஹ்ய பாஷையில் நீங்கள் போகுமிடத்தில் விஷத்தால் பயம், அக்னியால் பயம், இவை உண்டாகப்போகிறது. நீங்கள் ஜாக்கிரதையாக இருங்களென்று சொன்னார். தர்மபுத்திரர் அப்படியே ஆகட்டுமென்று பதில் சொல்லி, குந்திதேவி ஸஹோதரர்கள் இவர்களுடன் வாரணாவதம் நகரத்திற்குச் சென்றார். அப்பொழுது துரியோதனன் பாண்டவர்களைக் கொன்றுவிடுவதற்காக, தங்கம், ரத்னம் இவைகள் இழைத்துக் கட்டப்பட்டதான ஓர் அரக்கு மாளிகையை வாரணாவத பட்டணத்தில் கங்கா தீரத்தில் நிர்மாணம் செய்வித்து புரோசனனென்ற தன்னுடைய மந்திரியை அங்கு அனுப்பித்தான். ராமாவதார காலத்தில் அதிபாபிஷ்டனான ப்ரஹஸ்தனென்று எந்த ராக்ஷஸனிருந்தானே அவன்தான் துரியோதனனின் மந்திரியாய்ப்பிறந்தான். அவன் பாண்டவர்களிடம் வந்து

2087-1

நான் துரியோதனனை விட்டு உங்களிடம் வந்துசேர்ந்தேன் என்று கபடமாய்ப்பேசினாலும் உங்களிடம் விசுவாசத்தாலேயே இந்த திவ்யமான மாளிகையை நான் தயார் செய்வித்தேன். அந்த பாபியான துரியோதனனை அனுஸரித்துக்கொண்டிருக்க எனக்கு ஸம்மதமில்லை. தர்மத்தில் தைரியமுள்ள உங்களிடம் நான் எப்பொழுதும் வசிக்கப்போகிறேன் என்று புரோசனன் சொல்லவும், பாண்டவர்கள் நீ துரியோதனாதிகளை விட்டு வந்தது ஆச்சரியமே. நல்ல மங்களமாயிற்றென்று பதிற்கூறினர். யமனுடைய குமாரரான தர்மபுத்திரர் மேதஸ்ஸுடன் கூடிய அரக்கினால் நிர்மாணம் செய்யப்பட்ட அந்த மாளிகையை அதன் வாஸனையாலேயே இப்பேர்பட்டதென்று கண்டுகொண்டு புரோசனனை மகா பாபி என்று தெரிந்து ஸுமுகனான பீமசேனா! இந்த பாபியான புரோசனன் எங்களைக்கொல்ல விரும்புகிறான். நீ எப்பொழுதும் ஜாக்கிறதையாயிருப்பாயென்று பீமசேனரைப் பார்த்துச் சொன்னார். நீதி பலத்தாலும், ஆட்களின் வழியாயும் ஸமஸ்தமான உலக வ்யாபாரங்களையுமறிந்துகொண்ட விதுரர் பிறகு ஓர் சுரங்கம் வெட்டுகிறவனை கூப்பிட்டு அவனை தர்மபுத்திரரிடம் போய் தான் அவரிடம் ஊருக்குப்போகும்பொழுது சொன்ன குஹ்ய பாஷையைச்சொல்லி அந்த அரக்கு மாளிகையினின்றும் வெகுதூரம் பூமியிலேயே போகும்படி ஓர் சுரங்கத்தை வெட்டிவரும்படி கட்டளையிட்டார். பிறகு அந்த சுரங்கம் வெட்டுகிறவன் விதுரர் சொன்னபடி தர்மபுத்திரரிடம் அடையாளமாக அந்த வார்த்தையைச் சொல்லி அந்த அரக்கு மாளிகைக்கு ப்ராகாரம் கட்டுவதாய் சாக்கு சொல்லி வெகுதூரம் ஓர் சுரங்கமார்க்கத்தைச் செய்தான். அந்த சுரங்கத்தின் வாசலை பாண்டவர்கள் வசிக்கும் மாளிகையில் ஏற்படுத்தினான். அந்த வாசலை மற்ற ஜனங்களுக்குத்தெரியாமல் மறைத்துவைத்துவிட்டு அவன் தன் வீட்டுக்குச்சென்றான். பிறகு பீமசேனர் புரோசனன் இவர்கள் ஒருவரையொருவர் கொல்வதற்காக ஸமயத்தை எதிர்பார்த்துக்கொண்டு பரஸ்பரம் ஒன்றரை வருஷம் அந்த அரக்கு மாளிகையில் வசித்தனர். அந்த புரோசனனின் தமக்கை ஐந்து மக்களுடன் கூடி அந்த அரக்கு மாளிகைக்கு வந்தாள்.



பிறகு பீமசேனர் இதேஸமயமென்று யோசித்து புரோசனன் முதலியோர் தூங்கிப்போனதைப்பார்த்து முதலில் தன் தமயன் தம்பி முதலானவர்களையும் குந்திதேவியையும் சுரங்கத்தில் கொண்டுபோய் வைத்துவந்தார். பிறகு பீமசேனர் புரோசனனையும் அவனுடைய தமக்கையின் ஐந்து பிள்ளைகளையும், அந்த தமக்கையையும் அரக்குமாளிகையுடன் கொளுத்தினார். அந்த புரோசனனின் தமக்கை பாண்டவர்களுக்கு விஷமிட்டுக்கொல்ல வந்திருந்தாள். பீமசேனர் மற்ற பாண்டவர்களுக்கு முந்தி முதலில் போஜனம் செய்பவராதலால் அவளிட்ட விஷத்தை அவர் ஜீர்ணத்துக்குக் கொண்டுவந்த நிமித்தம் பாண்டவர்களை அவள் கொல்லமுடியவில்லை. ஐந்து பிள்ளைகளுடன் கூடிய அந்த புரோசனனுடைய தமக்கை தன் பிள்ளைகளுடன் அதிதிதேவியாக ஆகவேண்டும்; தன் பிள்ளைகள் தேவதைகளாக ஆகவேண்டும்; என்று தவம் புரிந்தாள். ஒரு வருஷம் தபஸ் செய்தபிறகு பரமசிவன் ப்ரஸன்னமாகி நீ உன் பிள்ளைகளுடன் சாகாமலிருக்கும்பக்ஷத்தில் உன் இஷ்டப்படி நீ அதிதி தேவியாகிறாய் என்று வரனளித்தார். இந்த எல்லா சமாசாரத்தையும் அறிந்திருந்த பீமசேனர் ஐந்து மக்களுடன் கூடிய குச்சித புத்திக்கொண்ட அந்த புரோசனனின் தமக்கையையும், புரோசனனையும் கொன்று, பயத்தால் பலமிழந்த தன் அண்ணன் தம்பிகளையும். தாயான குந்திதேவியையும் தூக்கிக்கொண்டு சுரங்கத்தின் வழியாய் புறப்பட்டு பாதிராத்திரி வேளையில் பிரயாணம் சென்றார். புரோசனனைக்கொன்றதையறிந்து துரியோதனாதிகள் பீஷ்மாதிகளுடன் யுத்தத்திற்கு வந்தால் எங்களுக்கு என்ன கஷ்டமேற்படுமோவென்று பீமசேனரைத்தவிர மற்ற நான்கு பாண்டவர்களுக்கும் மிக்க பயமேற்பட்டது. பீமசேனர் சுயம் பயமில்லாதவராயினும், பீஷ்மர், துரோணர் முதலான குருமார்களுடன் நேராக யுத்தம் செய்ய இஷ்டமில்லாமல், தர்மபுத்திரருடைய வாக்யத்தை காப்பாற்றுவதற்காக தாயான குந்தி முதலியவர்களை தூக்கிக்கொண்டு கங்கையின் கரைக்கு வந்தார். அங்கு விதுரர் அனுப்பிவைத்திருந்த படகில் ஏறிக்கொண்டு கங்கையைக்கடந்து முன்னடி பிரயாணம் செய்தார். அந்த கப்பலோட்டிகள் சொன்ன

வார்த்தையால் விதுரன் முன்னாடி சொன்னவைகளை அறிந்து அவர்களிடம் நம்பிக்கை வைத்து பீமசேனரின் முதுகில் ஏறிக்கொண்டு கங்கையின் அக்கரையிலுள்ள ஹிடிம்பவனத்திற்கு எல்லோரும் சென்றனர். மறு நாள் சூரியோதயமானவுடன் எரிந்துபோயிருந்த அந்த அரக்கு மாளிகையில் ஏழு சவங்கள் கிடந்திருப்பதைப்பார்த்து வாரணாவத நகரத்திலுள்ள எல்லா ஜனங்களும் அழுதனர். குச்சித புத்தியுள்ள துரியோதனன் தர்மமார்க்கத்திலுள்ள பாண்டவர்களை புரோசனனுடன் சேர்த்து தகிக்கச்செய்திருக்கிறான். ஐயோ! இந்த கஷ்டம் பாண்டவர்களுக்கு நேர்ந்தது. மகாபாபியான அந்த புரோசனனும் ஈசுவர இச்சையால் எரிந்துபோனான். ஸாது ஜனங்களிடம் விஷமச் செயலை செய்பவன் எவன்தான் ஸுகமடைவான் என்று ஜனங்களழுதனர். வாரணாவத பட்டணத்தின் ஜனங்கள் மூலமாய் பாண்டவர்கள் எரிந்துபோன சமாசாரத்தை திருதராஷ்டிரன், பீஷ்மாசாரியார் முதலியோர் கேட்டு மிக்க துக்கமடைந்த மனமுள்ளவர்களாய் ஐயோ! கஷ்டம் வந்ததே என்று பேசிக்கொண்டனர். பிறகு துரியோதனாதிகள் மனதிற்குள்ளே சந்தோஷப்பட்டுக்கொண்டு வெளியே மெப்புக்காக பொய்யாக அழுதனர். விதுரன் பாண்டவர்கள் பிழைத்திருப்பதை அறிந்திருந்ததால் மெப்புக்காக பொய்யாக அழுதான், பிறகு திருதராஷ்டிரன் முதலியோர் குந்திதேவி பாண்டவர்கள் இவர்களுக்கு சரமக்கிரியைகளைச் செய்தனர்.

---

## ஹிடிம்பாஸுர வதம்.

---

பீமசேனர் தன் அண்ணன் தம்பிகளையும், குந்திதேவியையும் தூக்கிக்கொண்டு, ஹிடிம்பாஸுரனுடைய வனத்திற்கு வந்து சேர்ந்தார். குந்தி முதலானவர்கள் தாகத்தால் வருந்தி குடிக்க ஜலம் வேண்டுமென்று பீமசேனரை ப்ரார்த்திக்கவும், பீமசேனர் அவர்களை ஓர் மரத்தினடியில் படுக்கவைத்துவிட்டு வெகுதூரம்



சென்று ஓர் குளத்தின் சமீபம் போய் அங்கு தன்னுடைய உத்தரீயத்தில் தாமரை இலையை வைத்து அதில் ஜலத்தை நிரப்பிக் கட்டிக்கொண்டு வந்துசேர, குந்தி முதலியோர் அயர்ந்து தூங்கிவருவதைப்பார்த்தார். நித்திரையிலிருந்த அண்ணன் தம்பிகளின் ஸம்ரக்ஷணார்த்தமாக பீமசேனர் விழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கையில் ஹிடிம்பனென்ன ஓர் அசுரன் தனது வனத்தில் நரவாடை ஏற்படவே அவ்விடத்திலுள்ள பாண்டவர்களைக்கொல்வதற்காக தனது தங்கையான ஹிடும்பி என்ற ராக்ஷஸியை அனுப்பிவித்தான். அந்த ஹிடிம்பி அழகான ரூபத்தைத் தரித்துக்கொண்டு அவ்விடம் வந்து பீமசேனரைக்கண்டாள். அவள் மகேந்திரனுடைய பத்னியாவாள். ஆனால் சசீதேவியல்ல. அவள் சசீதேவியைத்தவிர்த்த வேறொரு தேவஸ்திரீ. இந்திரனுக்கு ப்ரியமானவள். இந்திரலோகத்திற்கு அலங்கார பூதமானவள். அவள் சசீதேவியுடன் பொச்சரிப்புக்கொண்டு போட்டிப்போட அதனால் சசீதேவியின் சாபம் அவளுக்கு ஏற்பட்டு அவள் ராக்ஷஸியின் சரீரத்தை அடைந்தாள். அந்த ஹிடிம்பி பீமசேனரை வாயுபகவானுடைய அவதாரமென்றறிந்துகொண்டு தன் சாபம் நீங்கி மூலரூபத்தை அடையும்பொருட்டு பீமசேனரை அணுகி அவருடைய அங்க ஸங்கத்தை யாசித்தாள். ஸுந்தரமான ரூபமுள்ள அந்த ஹிடும்பியைப்பார்த்து பீமசேனர் தன் தமையனார் விவாகம் செய்துகொள்வதற்குமுன் தான் ஒரு ஸ்திரீயையும் அடையமாட்டேன், இது தர்மமாகாதென்று சொன்னார். அவள் மன்மத பாதைக்கு வசமாகி அடுத்தடுத்து தன்னை விவாகம் செய்துகொள்ளும்படிக்கேட்டாள். அந்த ஹிடும்பியிடம் வாயு பகவானின் பாரியாளான பாரதிதேவியின் ஆவேசமுண்டு. பாரதிதேவி அந்த ஹிடிம்பி செய்த தபஸ்ஸால் வெகுசீக்கிரமே ப்ரஸன்னமாகி அவளிடம் தன் ஆவேசத்தையும் வாயுபகவானின் ஸங்கமத்தால் சாப நிவிருத்தியையும் வரனாக அளித்தாள். அந்த காரணத்தால் அந்த ஹிடிம்பி பீமசேனருடைய அங்கஸங்கம் பெற்று தன் ஸ்வரூபத்தை அடைந்தாள். ஹிடிம்பி தனக்கு தன் பூர்வஞானமிருப்பதை அறிவிப்பதற்காக இவ்வாறு பேசினாள். ஹே பீமசேனா! ஸமர்த்தாயும் ஸகலஜகத்குருவாயும் லக்ஷ்மீபதியுமான ஸ்ரீவேத

வியாஸரூபி ஸ்ரீநாராயணர் நாளைக்கு மறுநாளிங்குவந்து என்னை உங்களுக்கு விவாகம் செய்துவைக்கப்போகிறார். அப்பொழுது தாம் என்னுடைய இஷ்டத்தை அளிக்கப்போகிறீர் என்றாள். இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது ஹிடிம்பன் மகா கோபத்தையடைந்தான். தன் ஆகாரத்திற்காக பாண்டவர்களைக் கொன்று மாமிஸத்தைக் கொண்டுவாவென்று தன் தங்கையான ஹிடிம்பியை முன்னாடி அனுப்பியிருந்தான். அவள் வந்துசேர தவக்கப்படவும், ஹிடிம்பாஸுரன் மகா கோபங்கொண்டு தன் தங்கையான ஹிடும்பியையும், பீமசேனரையும் கொல்வதற்காக ஓடிவந்தான். அவ்வாறு வந்தவன் பீமசேனரிடம் வந்து சேர்ந்தான். ஹிடிம்பி பீமசேனரின் காலில் விழுந்தாள். பீமசேனர் ஹிடும்பியையும், அண்ணன் தம்பிகளையும், குந்திதேவியையும் ரக்ஷிப்பதற்காக ஹிடிம்பாஸுரனை எதிர்த்துச் சென்றார். அப்பொழுது சகோதரர்களின் நித்ரைக்கு பங்கமேற்படுகிறதே என்று பயந்து பீமசேனர் ஹிடிம்பாஸுரனை வெகு தூரம் இழுத்துப் போய் அவனுடன் யுத்தம் செய்தார். பீமசேனரும் ஹிடும்பாஸுரனும், முஷ்டிகளாலும் மரங்களாலும், கல்களாலும், மலைகளாலும் யுத்தம் செய்ய அந்த பெரிய சப்தத்தால் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் எழுந்தனர் பிறகு பீமசேனர் ஸகோதரர்களின் பயத்தைப்பார்த்து ஹிடிம்பாஸுரனை அவனுடைய ஹிருதயத்தில் அடித்தார். பரமசிவனுடைய வரத்தால் எல்லோராலும் ஜயிக்கமாளாத ஹிடிம்பாஸுரன் பீமசேனருடைய புஜபலத்தால் அடிபட்டவனாய் பூமியில் விழுந்தான். வாயிலிருந்து அதிகமாய் ரத்தத்தைக் கக்கிக்கொண்டு பிராணனை விட்டான், நிச்சயமாய் கிரமமாகவே அந்தம்தமஸ்ஸை அடைந்தான். எல்லோராலும் கொல்லமுடியாதவனும், பரமசிவனுடைய வரத்தால் ஸம்ரக்ஷிக்கப்பட்டவனுமான ஹிடிம்பாஸுரனை பீமசேனர் கொன்று அண்ணன் தம்பிகளுடனும், தாயுடனுங்கூடி முன்னாடி பிரயாணம் புறப்பட்டார். அந்த ஹிடிம்பி என்ற ராக்ஷஸியும் பீமசேனரின் பின் புறப்பட்டாள். பிறகு அவள் குந்தியையும், தர்மபுத்திரரையும் பீமசேனர் தன்னை விவாகம் செய்துகொள்ளும்படி செய்புங்களென்று ப்ரார்த்தித்தாள். அவ்



வாறே குந்தியும் தர்மபுத்திரரும் ஹிடிம்பியை விவாகம் செய்து கொள்ளும்படி சொல்லியும், பீமசேனர் இதனால் தர்மம் கெட்டுப்போகுமென்று அந்த வார்த்தையை நடத்திக்கொடுக்கவில்லை. அச்சமயம் மேலான எல்லா குணபூர்ணராயும் அநந்தமான ஸுகத்திற்கு கடலாயும், ஞானமாகிற கிரணங்களால் வ்யாப்தராயும் ஸர்வோத்தமராயுமுள்ள ஸ்ரீவேதவியாஸ ரூபங்கொண்ட ஸ்ரீஹரி அங்கு ப்ராதுர்பவித்தார். ஸ்ரீவேதவியாஸரைப்பார்த்து மகா சந்தோஷமடைந்த பாண்டவர்கள் குந்திதேவியுடன் பிரம்மாவுக்கும் குருவான ஸ்ரீவேதவியாஸரை விசேஷமாய் பூஜை செய்து உத்தமமான மகாஸ்நேகத்தால் மலர்ந்த கமலக்கண்ணுள்ள ஸ்ரீவேதவியாஸரால் கொண்டாடப்பட்டவராய் கீழே உட்கார்ந்தனர். பிறகு ஹிடிம்பியால் நமஸ்காரம் செய்யப்பட்ட ஸ்ரீவேதவியாஸர் பக்தியால் தலை குனிந்திருக்கும் பாண்டவர்களைப்பார்த்து பீமசேனரிடம் இவ்வாறு சொன்னார். ஸ்வர்க்க லோகத்திற்கு அலங்காரமாயிருப்பவளும், யௌவனமாயிருப்பவளுமான ஹிடிம்பியை நீ விவாகம் செய்துகொள். இவளிடம் பிள்ளை பிறந்தவுடன் இவள் உன்னை விட்டுப் புறப்பட்டு போகட்டும் என்று கணக்கற்ற குணமுள்ள ஸ்ரீவேதவியாஸர் சொன்ன பிறகு பீமசேனர் அப்படியே ஆகட்டுமென்று சொல்லி ஹிடிம்பியை விவாகம் செய்துகொண்டார். ஹிடிம்பி சூரியோதயமானவுடன் தன்னுடைய தோளின்மீது பீமசேனரை ஏற்றிவைத்துக் கொண்டு தேவர்கள் சஞ்சரிக்கும் இடத்திற்கு அழைத்துப்போனாள்.

அவள் பீமசேனருடன் சேர்ந்து நந்தவனம் முதலான தேவ உத்யானவனங்களில் விளையாடிவிட்டு சாயங்காலத்தில் குந்தியுடனிருக்கும் பாண்டவர்களிடம் வந்தாள். இவ்வாறு ஹிடிம்பியும், பீமசேனரும் க்ரீடித்துவரும்பொழுது இந்த ஹிடிம்பவனத்தில் ஆறுமாதம் கழிந்தது. அப்பொழுது மகா வீர்யவானாயும், பலமுள்ளவனுமான குமாரன் பிறந்தான். முன்பு தேவதையாயும் பின்பு ராக்ஷஸனாயும் மாறிய நிர்ருதி என்றவன் பரமசிவனின் ஆவேசங்கொண்டவனாய் கடோத்கஜனென்று மக

ணுய்ப் பிறந்தான். அவன் பிறக்கும்பொழுது அவனுடைய தலை கடம்போல் மழமழவென்று மயிரில்லாமலிருந்தது. பின்பு ஓர் க்ஷணத்தில் மயிர்கள் கிளம்பின. ஆகையால் இவனுக்கு கடோத்கஜனென்று பெயர் வந்தது. அந்த மகன் பிறந்ததும் ஸ்ரீவேதவியாஸர் முன்பு ஏற்படுத்திய கால நியமத்தின்படி. பிள்ளையுடன் கூடிய அந்த ஹிடிம்பியைக்கூப்பிட்டு பீமசேனர் நீ புறப்பட்டுப் போ; நாம் உங்களை நினைக்கும்போது நீங்கள் இருவர்களும் வந்து சேருங்களென்று சொன்னார். ஹிடிம்பியும் அப்படியே ஆகட்டுமென்று பாண்டவர்களிடம் சொல்லிக்கொண்டு கடோத்கஜனுடன்கூடி தேவலோகத்திற்கு பிரயாணம் செய்தாள். அச்சமயம் உத்கிருஷ்டமானதும், கணக்கற்றதுமான காந்தி பொருந்தியவரும், பூர்ணமாயும் நாசமற்றதாயும் ஆனந்தமுள்ளவருமான ஸ்ரீவேதவியாஸர் அவ்விடம் வந்து பாண்டவர்களை அழைத்துக்கொண்டு பரமசிவனின் வரத்தால் ஜயிக்கவும், கொல்லவும் முடியாதவனான பகாஸுரனின் ஸம்ஹாரத்திற்காகவென்று சீக்கிரம் ஏகசக்ரா பட்டிணம் வந்து சேர்ந்தார். பிராம்மண பையன்களைப்போல் வேஷம் தரித்துக்கொண்டிருந்த அந்த பாண்டவர்களை ஸ்ரீவேதவியாஸர் தம்முடைய சிஷ்யர்களென்று சொல்லிக்கொண்டு அவ்வூரில் ஓர் பிராம்மணரின் வீட்டில் அமர்த்தி சிறிது காலத்திற்கு பின்பு நான் வந்து சேருகிறேனென்று சொல்லி பாண்டவர்களுக்கு புத்திமதியும் சொல்லி பதரிகாசிரமம் புறப்பட்டுபோனார். பிறகு பாண்டவர்கள் வேதாத்யயனம் செய்துகொண்டு பிராம்மண ரூபத்துடன் ஏகசக்ரா பட்டணத்தில் அந்த பிராம்மணனுடைய வீட்டில் வசித்துவந்தனர். பாண்டவர்கள் அவ்வூரில் பிக்ஷையை எடுத்துக்கொண்டிருக்கும்பொழுது பீமசேனர் அவருக்கு ஓர் குயவன் செய்துகொடுத்த ஓர் வீட்டின்அளவு பெரியதான பிர்மாண்ட பானையை எடுத்துக்கொண்டு வைசியர்களின் வீடுகளிலேயே ஹுங்காரம் செய்துகொண்டு தினம்தோறும் பிக்ஷைக்குப் போய்வந்தார். அதைக்கண்டு தர்மபுத்திரர் பீமசேனரை ஜனங்கள் ஸுலபமாய் இன்னாரென்று கண்டுபிடித்துவிடுவார்களென்று சந்தேகப்பட்டு பீமசேனரைப்பார்த்து இவ்வாறு சொன்னார். (தொடரும்)



# ஸ்ரீவாதிராஜஸ்வாமிகளின் சரித்திரம்.

(முன் தொடர்ச்சி.)

மாத்மாவான ஸ்ரீ வாகீசதீர்த்தரின் அருளால் ஸரஸ்வதியம்மாள் சீக்கிரமே கர்ப்பம் தரித்தாள். கர்ப்பம் பூர்ணிமாசந்திரனைப்போல் நாளடைவில் விருத்தியடைந்து ப்ரகாசித்துவந்தது. ஸ்ரீ வாகீசதீர்த்தர் த்ரிகால ஞானியானதால் ஸரஸ்வதியம்மாளின் ப்ரஸவதினத்தை எதிர்பார்த்திருந்தார். ஸ்ரீ ராமாசாரியார் தனக்கு ஸத்புத்ரன் பிறப்பது நிச்சயமென்றுணர்ந்து அந்த புத்ரன் தன்னிடமே இருக்கச்செய்யவேண்டுமென்றும் அதற்கு அந்த புத்ர ஜனனம் தன் வீட்டிற்குள்ளேயே நடக்கவிடவேண்டுமென்றும் எக்காரணத்தைக்கொண்டும் அந்தப்ரஸவகாலத்தில் தன்பாரியாளை வெளியே செல்லவிடலாகாதென்றும் நிச்சயித்து வெகுபந்தோபஸ்தாய் அவளை வைத்துகாப்பாற்றிவந்தார். அவள் வெளியே போய் செய்யும் காரியங்களை எல்லாம் இவரே சுயமாய் நடத்திவந்தார். ஸரஸ்வதியம்மாளும் அதை உணர்ந்து வெகு ஜாக்கிரதையுடன் தன் சொந்த கிருகத்திற்குள்ளேயே வசித்துவந்தாள். ப்ரஸவகாலம் கிட்டியவுடன் ஈசுவர சங்கல்பத்தால் ஓர் அதிசய சம்பவம் நேர்ந்தது. ஒருநாள் ஸாதனித்வாதசி நேர்ந்தது. அன்று ஸ்ரீராமாசாரியார் தமது ஆன்ஹிகங்களையும் தேவபூஜாதிகளையும் வெகு சீக்கிரமே முடித்து பாரணைக்காக இலையில் உட்கார்ந்து போஜனம் செய்துகொண்டிருந்தார். அச்சமயம் அந்த வீட்டிற்கடுத்தாப்போல் வடபுறத்திலுள்ள அவருக்குச்சொந்தமான நஞ்சையில் விளைந்திருந்த நெல்கதிர்களை ஓர் பசுமாடு மேய்ந்துகொண்டிருப்பதைக் கண்டு [illegible]ம் தாளாமல் ஒரு நொடியில் போய் அதை ஓட்டிவிட்டு வருகிறேனென்று சொல்லி அந்த இடத்திற்கோடிச்சென்றார். அவ்வாறே அவர் அந்த மாட்டை ஓட்டிவிட்டு திரும்புங்கால் ஈசுவர ஸங்கல்பத்தால் உடனே அவளுக்கு ப்ரஸவவேதனை கண்டு ஓரடியுமெடுத்து வைக்க முடியவில்லை. அக்ஷணமே அந்த இடத்திலேயே அவளுடைய ப்ரஸவத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. த்ரிகால ஞானியான ஸ்ரீவாகீசதீர்த்தர் ஈசனுடைய ப்ரேரணையை நன்கு கண்டுகொண்டு குழந்தை பிறந்தவுடன் அதற்கு பூஸ்பரிசம் ஏற்படாமலிருக்கச்செய்ய ஓர் தங்கத்தாம்பாளத்தை ஸ்திரீகளிடம் கொடுத்து அனுப்பினார். அவ்வாறே சுபயோக சுபகரண சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீபூவராஹனுடைய அருளால் புத்ரஜனனம் ஏற்பட்டது. ஸ்ரீராமாசாரியார் அந்த புத்ரோத்ஸவத்தை கண்டு சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்க ஸ்ரீ வாகீசதீர்த்தர்

அந்த இடத்திற்கு விஜயம் செய்து ஸ்ரீராமாசாரியாரைப் பார்த்து ஆசாரியாரே! மிகவும் சந்தோஷம். இப்பொழுதாவது தெய்வ ஸங்கல்பம் பிரபலமென்பதை கண்டுகொண்டீர்களா! நீங்கள் உங்கள் ஸம்ஸாரத்தை எவ்வளவு கட்டுக்காவலில் வைத்திருந்தும் ப்ரஸவகாலத்தில் அந்த அம்மாள் ஸ்ரீ பூவராகனின் க்ஷேத்திரத்திற்கே வரநேரிட்டது. புத்ரனும் ஸ்ரீ பூவராகனின் ஸ்வாதீனமாகிவிட்டானல்லவா? என்றார். ஸ்ரீ ராமாசாரியார் ஆமாம் இது உண்மையே. எல்லாம் ஈசுவரனின் நியமனம்தான் என்று சொல்லி ஸரஸ்வதியம்மாளின் அபிப்பிராயத்தையும் கேட்டு அந்த குழந்தையை தங்கத்தாம்பாளத்தில் வைத்து ஸ்ரீ வாகீசதீர்த்தரின் சரணஸன்னிதானத்தில் அர்ப்பணம் செய்தார். அங்கிருந்தவர்களெல்லோரும் இந்த ஸம்பவத்தைக்கண்டு கண்ணீர் விட்டழுதார்களாயினும் ஸ்ரீராமாசாரியாரும் ஸரியே, ஸரஸ்வதியம்மாளும் ஸரியே மிகுந்த ஸந்தோஷத்துடன் ஈசுவரனுடைய ஆக்ஞை என்று மனதை திடப்படுத்திக் கொண்டு ஸ்ரீவாகீசதீர்த்தர் தன் குழந்தையை ஏற்றுக்கொள்வதை பார்த்திருந்தனர். ஸ்ரீவாகீசதீர்த்தர் மிகுந்த அன்புடன் குழந்தையை வாரி எடுத்துக்கொள்ளவும், எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கையில் அந்த குழந்தை ஸ்ரீவாகீசதீர்த்தரைக்கண்டு இரண்டுகைகளையும் கூப்பிக் கொண்டு தலைமீது தூக்கிக்கொண்டது. எல்லோரும் இந்தஅதிசயத்தைக் கண்டு பிரமித்தனர். உடனே ஸ்ரீவாகீசதீர்த்தர் மனமகிழ்ந்து தீர்த்த ப்ரோக்ஷணம் செய்து வேதமந்திரங்களையும் ஸ்தோத்திர கவசங்களையும் சொல்லி குழந்தையை தடவிக்கொடுத்து ஸ்ரீ பூவராகனின் கைங்கரியத்துக்காக பிறந்திருப்பதால் இந்த குழந்தைக்கு வராஹனென்று நாமகரணம்செய்ய ஆக்ஞாபித்தார். பிறகு ஸ்ரீராமாசாரியாரிடம் அந்த குழந்தையைதிருப்பிக்கொடுத்து குழந்தையின் திருவிளையாடல்களைப்பார்த்து ஆநந்தப்பட்டு உபநயனம் வரையிலுள்ள ஸம்ஸ்காரங்களை அந்தந்த காலத்தில் செய்து, பிறகு சுவாதீனத்தில் இவரை விட்டுவிடுங்கள் என்று ஆக்ஞாபித்தார். இவர் பிறந்தது கி. பி. 1480ம் வருஷம் சார்வரி ஸம்வத்ஸரம் என்றும் சொல்லப்படுகிறது. இவர் பிறந்த நஞ்சை நிலம் இன்றைக்கும் கௌரீகத்தே என்று பிரஸித்தமாக இருக்கிறது. கௌரீ என்று ஸ்ரீ ராமாசாரியாரின் ஸம்ஸாரத்தின் பெயராய் இருக்கவேண்டுமென்று இதனால் சிலர் ஊகிக்கின்றனர்: இந்த நஞ்சை நிலத்தில் விளையும் அரிசி இன்றைக்கும் ஸ்ரீ வாதிராஜஸ்வாமிகளின் புண்யதினத்திற்கு உபயோகப்படும்படியாய் ஸோதே மடத்துக்கு அவ்வூராரால் அனுப்பப்பட்டு வருகிறது. இவர் பிறந்தவிடத்தில் கல் மண்டபம் கட்டப்பட்டிருப்பதுடன் ஸ்ரீராமாசாரியாரின் வீடு ஸோதே மடமாகவும் விளங்கிவருகிறது.



## உபநயனம்.

உத்தம லக்ஷணங்கள் படைத்த அந்த குழந்தையை ராமாசாரியாரும் அவருடைய பாரியாளான ஸரஸ்வதியம்மாளும் வெகுஅன்புடன் கண்ணுக்கு கண்ணாய் வளர்த்து வந்தனர். அதன் அழகான விளையாட்டுகளைக்கண்டு ஆனந்த ஸமுத்திரத்தில் மூழ்கினர். உலகில் இதைவிட வேறு பாக்யமில்லை என்று மதித்திருந்தனர். நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வருகையில் [illegible] குழந்தையின் மேலான விளையாட்டுகளால் அவர் உலகில் அவதரித்த யாரோ ஒரு தேவோத்தமர் என்றே அவர்கள் எண்ணிவந்தனர். அதன்படி லோக விலக்ஷணமாய் சொற்பநாளிலேயே குழந்தை வெகுஅழகாயும் சமத்காரமாயும் பகவத் பக்தி நிறைந்ததாயும் பேசவாரம்பித்தது. சரியான காலத்தில் குழந்தையான ஸ்ரீவராகாசாரியாருக்கு அக்ஷராப்யாஸம் நடத்திவைத்தார். அதிலும் அவருடைய அதிசயமான சாமர்த்யம் வெளியாயிற்று. ஸ்ரீவராஹாசாரியாருக்கு ஏழாவது வயதுவந்தவுடன் தந்தையான ராமாசாரியார் உபநயனம் செய்வித்து வேதாதிகாரம் பெறச்செய்தார். சரியானகுருவிடம் அமர்ந்து வேதங்களை எல்லாம் அத்யயனம் செய்தார். ஒருஸமயம் இவருடைய வித்யாப்ரபாவத்தைக் கண்டு சந்தோஷப்பட்டு தாய்தந்தையர்கள் தங்கள் அருகில் பாலகனை ஸ்ரீவராஹாசாரியாரை உட்கார்த்திவைத்துக்கொண்டு "குழந்தாய்! தாயிடம் உனக்கு அதிக விசுவாசமா அல்லது தந்தையிடம் வாஞ்சை அதிகமா" என்று கேட்டனர். அதற்கு ஸ்ரீவராஹாசாரியார் சிரித்துக்கொண்டு உங்களிருவர்களிலும் எனக்கு அதிக ப்ரேமையிருப்பினும் என் நிருபாதிக தந்தையான ஸ்ரீவராஹனிடம்தான் எனக்கு ப்ரீதி அதிகமாக இருக்கிறது என்றார். இந்த வார்த்தையைக்கேட்டவுடன் இவர்களின் மனம் படபடத்தது, முகம் வாட்டமடைந்தது. திடீரென்று கண்களினின்றும் தாரைதாரையாய் கண்ணீர் பெருகவாரம்பித்தது. அந்தக்ஷணம் வரையில் அவர்களுக்கு ஸ்ரீவாகீசதீர்த்தருக்கு வாக்குக் கொடுத்தது ஞாபகம் வந்திருக்கவில்லை. பூவராஹனென்று சொன்னவுடனே பூர்வசரித்திரம் ஞாபகம்வந்து குழந்தைக்கு உபநயனமாகிவிட்டதே! எங்கு ஸ்ரீஸ்வாமிகள் சொல்லியனுப்பிவிடுவாரோ! குழந்தையை அழைத்துக்கொண்டு போய்விடுவாரோ! குழந்தையின் விரஹம் எங்கு ஏற்படுமோவென்று பற்பல யோசனைகள் உடனே அவர்களின் மனதில் தோன்றின. ஸ்ரீவராகாசாரியார் இதன் காரணத்தை அறியாமல் நான் சொன்னதில் தவறு என்ன! நீங்கள் ஓர்காரணத்தை

208709
சென்னை-600 008

முன்னிட்டு தாய்தந்தையர்களாவீர். ஸர்வஜகத் கர்த்தாவான பகவான் பூவராகன் நிருபாதிக மாதாபிதாவானதால் அவரிடம் அன்புகொள்வதுதான் நியாயமாகும். அதுவே தர்மமாகுமென்று பலவாறு நீதிகளை எடுத்துச்சொல்ல இப்பேற்பட்ட மகா ஞானியான குழந்தையை எவ்வாறு விட்டிருப்பதென்று துக்கஸமுத்திரத்தில் மூழ்கினர். ஈசுவரசங்கல்பத்தால் அந்தக்ஷணமே இரண்டு ஆசாரியார்கள் அங்கு தோன்றினர். நீங்கள் யாரென்று ஸ்ரீராமாசாரியார் பிரச்னம் செய்ய நாங்கள் ஸ்ரீஸ்வாமிகளிடமிருந்து வந்திருக்கிறோம். உங்கள் பையனை அழைத்துவர ஆக்ஞையிட்டிருக்கிறாரென்று இடிவிழுந்தாப்போல் செய்தியை அறிவித்தனர். தாயான ஸரஸ்வதி சரேலென மூர்ச்சையாய் விழுந்தாள். ஸ்ரீராமாசாரியார் அவளுக்கு சைத்யோபசாரம் செய்தார். இதைக்கண்டு பாலகனான ஸ்ரீவராகாசாரியார் சிரித்துக்கொண்டு அந்த ஆசாரியார்கள் மூலமாய் தான் பிறந்த வரலாற்றை அறிந்து, தான் ஸ்ரீவாகீசதீர்த்தருக்கு கட்டுப்பட்டிருப்பதை தெரிந்துகொண்டார். உடனே மாதாபிதாக்களை ஆசுவாஸப்படுத்தி ஸத்யத்தைக் காப்பாற்றிக்கொள்வது முக்யதர்மமென்றும் ஸத்யத்திற்காக ஸ்ரீராகவன், அரிச்சந்திரன், பாண்டவர்கள் முதலியோர் எவ்வளவு பாடுபட்டிருக்கின்றனரென்பதையுமறிவித்து ஸத்யமார்க்கத்தில்புகுந்தால் பகவான் நல்லவழியைத்தானே காட்டுவாரென்று உருக்கமாய் பேசினார். மாதாபித்ருக்களை கூடவே வந்து ஸ்ரீவாகீசதீர்த்தரிடம் ஒப்புவித்துப்போகும்படி ஸ்ரீவராகாசாரியார் வேண்டிக்கொண்டார். அதிமேதாவியான மகனின் சொல்லைக் கேட்டு பரமசந்துஷ்டர்களாய் அந்த தம்பதிகள் உடனே ஸ்ரீவாகீசதீர்த்தரிடம்வந்து சாஷ்டாங்கம் நமஸ்கரித்து இதோ தாங்கள் எங்களிடம் ஒப்புவித்திருந்த பாக்யநிதி, ஸ்வர்ணவிக்ரஹம், வித்யாமூர்த்தி, எங்கள் குலமாணிக்கம் நவமணி ஸ்ரீவராகாசாரியனைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டோம். தயவுசெய்துஏற்றுக்கொள்ளவேண்டுமென்று ராமாசாரியார் சொன்னார். உடனே ஸ்ரீவாகீசதீர்த்தர் ஆனந்தபாஷ்பம்பெருக ஸ்ரீவராகாசாரியாரை இருகத்தழுவி உச்சிமூர்ந்து தன்மடியின்மீது உட்கார்த்திவைத்துக்கொண்டு அவர் கற்றுக்கொண்ட வித்யாவிஷயமாய் சிலபிரச்னைகளைக் கேட்டார். அவருடைய புத்திநுட்பத்தையும் வாக்சாதுர்யத்தையும் பார்த்துப் பரமானந்தமடைந்தார். ஸ்ரீவராகாசாரியார் தன்னுடைய விரஹம் தாளாமல் அதிகமாய் வருந்தும் தன்மாதாபித்ருக்களிடம் கருணைகாட்டி அனுக்ரஹம் புரியவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

(தொடரும்.)



# ஸ்ரீபீமசேனர் விஜயம்.

(முன் தொடர்ச்சி.)

ஆகவே தேவர்களில் ஸர்வோத்தமராயும் எல்லா ஜீவராசிகளாலும் ஸ்தோத்திரம் செய்யப்படுகிறவருமான வாயுபகவானை புத்திரனை உண்டாக்க ஏற்படுத்திக்கொள்வாய் என்று வாயுபகவானைப்பற்றி பாண்டுமகாராஜன் துதித்திருக்கிறார். தர்மன், மகேந்திரன், அசுவினீ தேவர்களாகிய மற்ற நான்கு பாண்டவர்களைவிட ஸர்வதேவோத்தமராகிய வாயுபகவானாகிய பீமசேனர் சிரேஷ்டரேயாவார். ஞானபலம், சரீரபலம் வாய்ந்தவர்களில் இவர் மகா சிரேஷ்டர் என்று பீமசேனர் பிறந்தவுடனே அசரீரவாணி ஏற்பட்டது. "தமப்யதிபலம் ஜாதம் வாகுவாசாசரீரிணீ" என்றார் ஸ்ரீவியாஸர். ரிக்யஜுஸ்ஸாமம் ஆதர்வணம் ஆகிய வேதங்கள், பாரதம், மூலராமாயணம் பாஞ்சராத்திரம் ஆகிய இந்த ஏழுப்ரமாணங்கள் இவரிடம் பூர்ணமாயிருந்ததால் இவர் பீமரென்றும் ஸ்வாமியான விஷ்ணுவுடன் எப்பொழுதும் இவர் சேர்ந்திருந்ததால் இவர் ஸேனரென்றும், ஆகவே பீமசேனரென்றும் இவர் அழைக்கப்பட்டார். பின்னடி கூறப்படும் சரித்திரம் இதை நன்கு விளக்கும். மகா பாகவதனான பீமசேனர் பிறந்தவுடன் பகவத் த்வேஷிகளான உலகிலிருந்த அசுரர்களும், அவர்களின் கக்ஷியைச்சேர்ந்த ராஜர்கள், மனுஷ்யாதமர்கள் அவர்களின் சைனியத்திலுள்ள யானை, குதிரைகள் எல்லாமே பயந்துபோய் ஜனமலங்களை உத்ஸர்ஜனம் செய்து ரக்தத்தைக் கக்கின. அவர்களின் மனதில் தானாகவே பீதி ஏற்பட்டது. பூமி படீரென வெடித்தது. இந்த சப்தத்தைக்கேட்டு அந்த சதசிருங்க பர்வதத்திலிருந்த வேங்கை முதலியவைகள் வெளிக்கிளம்பி பிரமாண்டமாய் சப்திக்க ஆரம்பித்தன. குந்தி பீமசேனனைப் பெற்று அப்பொழுதே அந்த குழந்தையை தன் மடியில் படுக்கவைத்துக்கொண்டிருந்தாள். அவள் ஓர் பெரிய வேங்கை தன்னை நோக்கியிருந்ததைப்பார்த்து பயந்துபோய் தடபுடலாய் குழந்தையை கீழே நழுவவிட்டாள். குழந்தை மலையின் பாறையின்மீது

உருண்டு விழுந்தது. பாண்டுராஜன் இதைப்பார்த்து உடனே தடபுடலாய் ஓடிவந்து அந்த வ்யாக்கிரத்தை பாணத்தால் அடித்துக் கொன்றுவிட்டு, குழந்தையை வாரி எடுத்து மார்போடணைத்து முத்தமிட்டுக் குழந்தையைப் பார்க்கையில் குழந்தைக்கு யாதொரு காயமும் ஏற்படாமலிருந்ததைப்பார்த்து சந்தோஷப்பட்டான். சற்று கவனித்துப் பார்க்கையில் குழந்தை உருண்டு விழுந்த அந்த கற்பாறைகளெல்லாம் சுக்கல் சக்கலாய்ப் போய் அம்மலையே பல இடங்களில் வெடித்துப்போனதைக் கண்டு ஆச்சரிய சமுத்திரத்தில் மூழ்கினான். சாமானியமாய் சதசிருங்கமென்று பெயர்கொண்ட அம்மலை உண்மையாய் பீமசேனர் சரீரம் பட்ட மாத்திரத்தால் சதசிருங்கமாகவே ஆகிற்று. தர்மபுத்திரன், பீமசேனர், அர்ஜுனன், நகுலன், சகதேவன் ஆகிய பஞ்சபாண்டவர்களுக்கு ஜாதகர்மாதிகளைச் செய்ய வஸுதேவன் தன் புரோகிதரான கசியபரை அனுப்பி அவைகளை கிரமப்படி செய்வித்தான். பாண்டவர்களுக்கு அவரே சௌலம், உபநயனம் முதலான ஸம்ஸ்காரங்களைச் செய்தார். அந்த சதசிருங்க மலையில் வசித்திருந்த சர்யாதிராஜனின் புத்திரனான சுக்ரராஜனிடமிருந்து பாண்டவர்கள் தனுர்வேதம் அப்யஸித்தனர். அர்ஜுனனுக்கு பதினான்கு வருஷம் முடிந்து அவனுடைய பிறந்ததினம் ஏற்பட, அதை முன்னிட்டு குந்திதேவி பிராம்மணர்களுக்கு போஜனம் செய்வித்திருக்கையில் பாண்டுராஜன் மன்மத பாணத்திற்கிரையாகி ஏகாந்தமாய் ஓர் உத்யான வனத்தில் மாத்ரியுடன் சம்போகித்தான். உடனே முன்பு ஏற்பட்ட கிந்தமரின் சாபத்தால் உயிர் துறந்தான். அப்பொழுது தர்ம புத்திரருக்கு வயது 16. பீமசேனருக்கு வயது 15. பிறகு மாத்ரி ஹடம் செய்து பர்த்தாவான பாண்டு ராஜனுடன் உடன்கட்டை ஏறினாள். ஐந்து குழந்தைகளை சம்ரக்ஷிப்பது தான் முறையென்று குந்தியை பாண்டுவுடன் ஸககமனம் செய்யாமல் அங்கிருந்த மகரிஷிகள் தடுத்துவிட்டனர். பிறகு கசியபரே கூடயிருந்து பாண்டுராஜனுக்கு தகனாதி கிரியைகளைச் செய்வித்தார். சதசிருங்க பர்வதத்திலுள்ள பதினாயிரக்கணக்கான மகரிஷிகள் சேர்ந்து பாண்டவர்களையும் குந்தியையும்



ஹஸ்தினாபுரத்துக்கு அழைத்துக்கொண்டுவந்து நகரத்துக்கு வெளிவாசலில் நின்றுகொண்டு திருதராஷ்டிரனுக்கு தாங்கள் வந்திருப்பதாய் அறிவித்தனர். உடனே திருதராஷ்டிரன் பீஷ்மத்ரோணாதிகளுடனும், துரியோதனாதிகளுடனும் நகரத்து ஜனங்களுடனும் வந்து அந்த மகரிஷிகளின் பெரிய கூட்டத்துக்கு மரியாதை செய்ய, மகரிஷிகளில் வயோதிகரான ஒருவர் பாண்டவர்கள் பிறந்த விருத்தாந்தத்தையும் பாண்டுராஜனின் மரணத்தையுமறிவித்து பாண்டவர்களையும், குந்தியையும் ஏற்றுக்கொண்டு தர்மமாய் ஸம்ரக்ஷிக்கும்படி சொல்லி எல்லோரும் மறைந்து சென்றனர். "கந்தர்வநகராகாரம் தத்ரைவாந்தர்ஹிதம் புன:| ரிஷிஸித்தகணம் த்ருஷ்ட்வா விஸ்மயம் தே பரம்யயு://" கந்தர்வ உலகம்போல் பதினாயிரக்கணக்கான ரிஷிகள் கூடியிருந்து எல்லோரும் திடீரென்று மறைந்தது மிகுந்த ஆச்சரியத்தை விளைவித்தது என்று ஆதிபர்வம் கூறுகிறது. அன்னியால் பிறந்த பாண்டவர்கள் கிரமப்படி பாண்டுராஜனின் வாரிசுகளெப்படி ஆவார்களென்று துரியோதனாதிகள் ஆக்ஷேபிக்க பாண்டுராஜன் பிழைத்திருக்கையிலேயே அவருடைய அனுமதியின்பேரில் தேவோத்தமர்களால் இவர்கள் பிறந்திருக்கிறார்களாதலால் நீங்கள் இவர்களை ஏற்றுக்கொள்ளாமலிருக்க முடியாதென்று ஆகாசவாணி உடனே சொல்லிற்று. அக்ஷணமே ஸ்ரீவேதவியாஸரும் அங்கு தோன்றி பாண்டவர்களின் கையைப்பிடித்துக்கொண்டு அவர்களின் தந்தையான பாண்டுராஜனின் அரண்மனையில் கொண்டு போய் விட்டார். ஸ்ரீவேதவியாஸர் பாண்டவர்களை தன்னுடைய பேரன்களாய் ஏற்றுக்கொண்டபின் இனி என்ன ஆக்ஷேபிப்பதென்று எல்லோரும் அதற்கிணங்கி பாண்டவர்களை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டனர். பாண்டுராஜனுக்கு கிரமப்படி ஹஸ்தினாவதியில் க்ஷத்திரியர்களுக்கு உசிதமான சரமக்கிரியைகள் திருதராஷ்டிரனின் மேற்பார்வையில் நடத்தப்பட்டன. அப்பொழுதே துரியோதனாதிகளுக்கு பாண்டவர்களிடம் மாச்சரியம் ஏற்பட்டது. பூமியில் பிறப்பெடுத்த அசுரர்களை ஸம்ஹரித்து பூமியின் பாரத்தைத் தொலைக்க அவதரித்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு ஸஹாயம் செய்வதற்காக பூமியில் பிறப்பெடுத்த தே

வோத்தமர்களில் வாயுபகவான் பகவானுக்கு முக்ய அங்கபூதராவார். ஆதலால் கலி முதலான அஸுரர்களைக்கொன்று அவர்களை அந்தம்தமஸ்ஸில் வீழ்த்த அவர்களுக்கு நாராயணனிடமும், முக்யப்ராணரிடமும் த்வேஷத்தை வளரச் செய்யவேண்டியது அவசியமாயிற்று. ஸ்ரீஹரி வாயுத்வேஷமன்னியில் அந்தம் தமஸ்ஸில் அசுரர்களுக்கு ப்ரவேசமில்லை. ஆகவே கலி முதலான அஸுரர்களுக்கு அந்தம்தமஸ்ஸை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக ஸ்ரீஹரிஸேவை என்றெண்ணி பீமசேனர் தன் அவதாரகாரியமாக துரியோதனாதி தைத்யர்களுக்கு பலவகையில் ஸ்ரீஹரி வாயுத்வேஷமேற்படும்படியான காரியங்களை பலமாகச்செய்து வந்தார். மற்ற பாண்டவர்கள் பீமசேனரைப்போல் இவ்வாறு அஸுரர்களிடம் நடந்துகொள்ளவில்லையாதலால் அவர்கள் ஸ்ரீஹரி சேவையில் பீமசேனரைவிட மிகவும் குறைந்தவர்களாவார்கள். பீமசேனர் செய்த காரியங்கள் இதை நன்கு விளங்கும்.

---

## பீமசேனரின் கிரீடைகள்.

"ஜவே லக்ஷ்யாபிஹரணே போஜ்யே பாம்ஸுவிகர்ஷணே/ தார்த்தராஷ்ட்ரான் பீமசேன: ஸர்வான் ஸபரிமர்ததி" என்றார் ஸ்ரீவேதவியாஸர். துரியோதனாதிகளுடன் சேர்ந்து பாண்டவர்கள் விளையாடிக்கொண்டிருக்கையில் பீமசேனர் வேண்டுமென்று துரியோதனாதிகளை இம்சித்து வந்தார். சந்தோஷமாய் அவர்கள் விளையாடிக்கொண்டிருந்தால் அந்த துரியோதனாதி நூறுபேர்களின் தலைமயிரையும் கையால் ஒருமிக்கச் சேர்த்துப்பிடித்து அவர்களை உயரத்தூக்கி ஓடிப்போய் ஓரிடம் கொண்டுவந்து சேர்ப்பார். அவர்கள் ஜலத்தில் நீந்திக்கொண்டிருந்தால் பத்து பையன்களை சேர்த்து பிடித்து ஜலத்தில் வெகு நேரம் அமுழ்த்திவைத்து அவர்கள் மூச்சுத்திணறி சாகும் தருவாயில் உயரக்கொண்டுவந்து விட்டுவிடுவார். அவர்கள் மரத்திலேறி பழங்களை பறித்துக்கொண்டிருந்தால் பீமசேனர் கீழே இருந்தபடி அந்த மரத்தை காலாலுதைத்து அந்த மரத்தை கடகடவென்று ஆடும்படிச் செய்வார். மேலே ஏறியிருந்த பையன்கள் கால்கள் தள்ளாடி கீழே விழுந்து கைகால் முதலியவைகள் முறிந்து சங்கடப்பட்டனர். (தொடரும்.)



# சங்கரலீலா விலாஸம்.

---

(முன் தொடர்ச்சி.)

---

மைசூர் மகாராஜா காலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்புராவ் M. A., எழுதுவதாவது:—

இவ்வாறு அத்வைதிகளிடமிருந்து ஸ்ரீமத்வாசாரியார் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் வேதத்தைப் பிடுங்கிக்கொண்டார். ஸ்ரீவேதவியாஸரின் பிரம்மஸூத்ரத்தைக் கைப்பற்றினர். அவருடைய ஸ்வாமியான ஸ்ரீகிருஷ்ணருடைய பகவத்கீதையை அத்வைதிகளை முன்னும் பின்னும் கட்டி எடுத்துக்கொண்டார். அவருடைய சிஷ்யர்களெல்லோரும் ஸ்ரீகிருஷ்ணரின் எச்சிலைத்தின்று அவருடைய மடத்தில் பெருத்தவர்களாதலால் இவ்வாறு கொள்ளையிட்டனர். இந்த சாஸ்திரங்களையெல்லாம் மடத்தில் பெரிய மூட்டைக் கட்டி வீபீஷணன், பலிச்சக்ரவர்த்தி, துருவன், ப்ரஹ்லாதன் இவர்களைப்போல் தப்த முத்திரைகளை தரித்தவர்களுக்கு உபதேசம் செய்தனர். இன்னமும் அவர்கள் எங்கும் ஜயம் பெற்று ஸ்ரீகிருஷ்ணரின் பாதத்தை அடைந்து ஆநந்தமாய் இருக்கின்றனர்.

அத்வைதமதம் முதன்முதலில் கௌடபாதரால் தான் கலியுகத்தில் தோன்றியதென்றும் அவருக்கு பரம்பரையாய் வந்ததல்லவென்றும் சரித்திரகாரர்கள் அநேகர் கூறியிருக்கின்றனர். அவைகளின் சிலவற்றை இங்கு எடுத்துக்காட்டுகிறேன்.

1. There is no uninterrupted tradition between Badarayana and Sankara. Macdonell Emeritus.
ஸ்ரீவேதவியாஸருக்கும் சங்கராசாரியாருக்கும் அவிச்சன்னமான உபதேச பரம்பரையிருப்பதாய் காணப்படுவதில்லை என்று மாக்டனல் எமிரிடஸ் சொல்லுகிறார்.

2. The Maya doctrine is first met with in the Karikas of Goudapada. A. A. Macdonell. மாயாவாதம் முதன்முதலில் கௌடபாதரின் காரிகையில்தான் காணப்படுகிறது.

ஏ. ஏ. மாக்டனல்.

3. Goudapada is the first systematic exponent of the Advaita Vedanta. Professer S. Radhkrishnan M.A., கௌடபாதர் அத்வைதமதத்தின் முதல் உபதேசகர்.

4. I do not know of any Hindu writer previous to Goudapada who attempted to give an exposition of the monistic doctrine.........either by writing an independent treatise as did Goudapada. S. Das Gupta M.A.,

வேறொரு கிரந்தத்திற்கு வ்யாக்யான ரூபமாகவோ ஸ்வதந்திர கிரந்தமாகவோ கௌடபாதருக்குப்பின் அத்வைதமதத்தை ப்ரவர்த்திக்க ப்ரயத்தனம் செய்தஎந்த ஹிந்து கிரந்தாசிரியரையும் நான் காணவில்லை.

5. There is reason to believe that the Bramha Sutras were first commented upon by some Vaishnava writers who held some form of modified Buddhism.

S. Das Gupta M. A.,

இந்த வசனங்களை விமரிசை செய்தால் அத்வைதமதம் ஸத்ஸம்பிரதாயத்தினின்றும் வந்ததல்லவென்றும் சங்கராசாரியாரின் பரம குருவான கௌடபாதாசாரியாரின் சொந்த கல்பனை என்றும் நிச்சயமாகிறது. புராதனமானதென்று சொன்னாலும் ஸ்ரீவேதவியாஸர் முதலான ஸாத்விகர்களின் ஸம்பிரதாயத்தினின்றும் வந்ததன்று. நாராயண முத்ரை முதலியவைகளை போட்டுக்கொண்டு பரிசுத்தர்களான ப்ரஹ்லாதன், விபீஷணன், சுகர், அம்பரீஷர், மார்க்கண்டேயர் முதலியவர்களுக்கு பரம விருத்தமானதென்று நிச்சயமேற்படுகிறது.

---

## அத்வைதமதம் ப்ரச்சன்ன பௌத்தமதம்.

---

இப்பொழுது மற்றொரு இரகசியத்தை நான் வெளியிடவேண்டியிருக்கிறது. நாலா பக்கங்களிலேயும் வெகு அழுத்தமான ஸூத்ரங்களால் (பிரம்மஸூத்ரங்களால்) பாதுகாக்கப்பட்ட வேதரூபமாகிய விஸ்தாரமான ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருக்கும் வைஷ்ணவமான த்வைத ஸித்தாந்தத்தைப் பார்த்துவிட்டு அசூயைகொண்ட சில மாயாவிகள் த்வைதிகளின் வேதராஜாங்கத்தை பிடுங்கிவிட மந்திராலோசனை செய்து, பற்பல சூழ்ச்சிகளைச்செய்து அரசன் இல்லை, எல்லாம் பொய் என்றிவ்வாறு எதிர் பிரசாரம் செய்யவாரம்பித்தனர். த்வைத மத பக்ஷபாதமுள்ள மகாவிஷ்ணு இதைக்கண்டு ஸகியாமல் இந்த மாயாவிகளின் சூழ்ச்சியை பகிரங்கப்படுத்தக்கருதி அவைஷ்ணவமதத்தார்களின் ஓர் சாராராகிய வேதமார்க்கத்தையே ஒப்புக்கொள்ளாதவர்களும், ஐக்கிய வாதத்தின் சத்ருக்களாயுமுள்ள பௌத்தர்களைக்கிளப்பி



விட்டார். மாயாவாதிகளை வெளிப்படுத்திய நவீனமான இம்மதத்தின் சுவையை மகாவிஷ்ணு அபரிசுத்தர்களான பௌத்தர்களுக்கு தானம் செய்துவிட்டு அவர்களை வஞ்சித்தார். "தைத்யானாம் நாசனார்த்தாய விஷ்ணுனா புத்தரூபிணா | பௌத்தசாஸ்திர மஸத்ப்ரோக்தம் நக்னநீல படாதிகம்" என்று பத்மபுராணம் முதலான சுலோகங்களாலும் மற்றும் பல ரிகார்டுகளாலும் இந்த விஷயம் நிச்சயமாகிறது. ஆகவே ஐக்யவாதிகள் ஒன்றிரண்டு ஸூத்ரக் கட்டுகளில் ஜீர்ணமாயுள்ளவைகளைக்கண்டு அவித்யா ரூபமாகிய எலியால் அதைக் கடிக்கச்செய்து வெளிப்பார்வைக்குச் ஸாதகமாய் காணப்படும் தத்வமஸி முதலான ஐந்தாறு வாசல்கள் வழியாய் வேதராஜாங்கத்தை ப்ரவேசிக்க எத்தனிக்கும்பொழுது அவர்களின் எல்லா யுக்திகளும் பௌத்தர்களால் கைக்கொண்டு விட்டதைப்பார்த்து அவர்கள் மனம் நொந்து விருத்தராய் தலை நிறைத்து மீசை நிறைத்துப்போன மாயாவிகளின் தலைவரான கௌடபாதாசாரியாரிடம் முறையிட்டனர். குலவிருத்தர்களின் ப்ரார்த்தனையை நடத்திக்கொடுப்பதாய் கௌடபாதர் ஒப்புக்கொண்டார். இருகக் கச்சையைக் கண்டிக்கொண்டார். வீட்டை விட்டுக் கிளம்பும்பொழுதே இடறினார். அபசகுனமுண்டாயிற்று. உடனே சிறிது பயந்து தண்டோபாயத்தை விட்டு ஸாமோபாயத்தாலேயே கபடமாக தங்கள் மதமாகிய மாதரசை பௌத்தர்களின் ஜயிலிலிருந்து விடுவித்துக்கொண்டு வர நிச்சயித்தார். அதற்கனுகூலமாக காலத்திற்கு தகுந்தகோலமாக தலையை மொட்டையடித்துக்கொண்டு பௌத்தர்களின் வேடத்தையே தரித்துக்கொண்டு பௌத்தர்களின் ஸம்பிரதாயத்தையே பின் பற்றிக்கொண்டு பௌத்தர்களுடனேயே இருந்துவிட்டார். மாத்யமிக காரிகை என்ற பௌத்தர்களின் நூலுக்கு இந்த கௌடபாதர் வ்யாக்கியானம் செய்திருப்பதாகவே சிலர் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். இது ஸம்பந்தமாய் சரித்திரக் காரர்களின் ஸம்மதியும் காணப்படுகிறது:—

(1) There are some who believe that Goudapada was himself a Buddhist and wrote a commentary on the Madyamica Karikas since in his opinion Buddhism tallied with the system of the Upanishads.

S. Radhakrishnan M. A.

(2) Goudapada flourished after all the Great Buddhic teachers Asvagosha Narayana, Asanga and

Vasubandhu. and I believe that there is sufficient evidence in his Karikas for thinking that he was possibly himself a Buddhist and considered that the teachings of the Upanishads tallied with those of the Buddha.

S. Das Guptha M. A. Ph. D.

(3) It is indeed possible as alleged by some that he may have been himself a Buddhist......we must believe that he regarded Buddhistic doctrine as suggesting to him an interpretation which could actually be found in the Upanishads and was indeed its fundamental truth.

U. S. Urquhart M. A. D. Litt.

இம்மூவர்களின் சாக்ஷியைக் கொண்டு கௌடபாதர் பௌத்தராய் ஆகியிருந்தாரென்று தெரியவருகிறது. இது கௌடபாதர் செய்த தந்திரம், ஆங்கிலேய மந்திரிக்குகூட இந்த ஸாமார்த்தியமில்லை. கௌடபாதர் பௌத்தர்களின் வீட்டில் அவர்களைப்போலவே இருந்து கிரமமாய் த்விதளாத்மகமான தன்னுடைய ஐக்யதத்வத்தை அவர்களிடமிருந்து களவாடிக்கொண்டு வந்துவிட்டார். மூச்சு பிடித்துக்கொண்டு ஒரே ஓட்டமாய் அவர்களின் வீட்டிலிருந்து ஓடிவந்தார். எங்கு அவர்கள் கண்டுபிடித்தால் தன்னைக் கொன்றுவிடுவாரோவென்று பயம், அதனால் ஆங்காங்கு ஏதோ தான் புதியதாக சொன்னதுபோல் சில புதிய வார்த்தைகளால் வெளிப்படுத்தினார். பௌத்த சிப்பாய்கள் அப்படிக்கிருந்தும் இதை அறிந்து ஓய்! இது எங்கிருந்து திருடிய தத்வம். பௌத்தர்களின் வீட்டில் இவள் இருந்தவளல்லவா? என்று கேட்டனர். அதற்கு கௌடபாதர் நயமாக இவ்வாறு பதில் கூறினார். உங்கள் தத்வ ஸுந்தரி சின்ன சின்ன அடியை வைத்துக்கொண்டு வேகமாய் நடக்கிறாள். எங்கள் பெண்ணோ மந்தகமனமுள்ளவள். வேண்டுமானால் இதை பரீக்ஷிக்கலாமென்றார். பௌத்த சிப்பாயிக்கு புத்தி ஏது. சூக்ஷ்மம் தெரியாமல் பேசாமலிருந்துவிட்டான். இதே கௌடபாதரின் வாக்யம்:— "க்ரமதே நஹி புத்தஸ்ய க்ஞானம் தர்மேஷு தாயின:। ஸர்வ தர்மாஸ்ததா க்ஞானம் நைதத்புத்தேன பாஷிதம்." இதன் தாத்பரியமாவது:— பௌத்தன் க்ரமிகமான (க்ஷணிகமான) அநேக ஜனங்களை ஒப்புக்கொண்டிருக்கிறான். நான் ஸ்திரமான ஓர் ஞானத்தைத் தான் சொல்லுகிறேனென்றார். மற்ற விஷயங்களில் அவர்களுக்கும் தனக்கும் பேதமில்லை என்று தாத்பரியம்.

(தொடரும்.)



## ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய
# மணிமஞ்ஜரி.

(ஏழாவது ஸர்க்கம்) முன் தொடர்ச்சி.

22. அந்த ஸத்ய ப்ரக்ஞரின் சிஷ்யரான ப்ராக்ஞதீர்த்தரென்பவர் பாடப்ரவசனம் செய்வதில் மகாஸாமர்த்தியம் பெற்றிருக்கிறார். ரிக்வேதம் யஜுர்வேதம் முதலிய வேதங்கள் உபநிஷத்துகள் இவைகளில் பண்டிதராயிருக்கிறார். சாந்தராயிருக்கிறார். அவர் மகாதபஸ்வியாகவுமிருக்கிறார். அவர் இப்பொழுது நந்திக்ராமத்தில் ஐந்நூறு சிஷ்யர்களுக்கு வேதங்களை பாடப்ரவசனம் சொல்லிக்கொண்டிருக்கிறார். 23. ஸம்பிரதாயமாய் வந்த வேததாத்பரியத்தை அறிந்தவர் இந்த ப்ராக்ஞதீர்த்தரைத்தவிர வேறொருவருமில்லை. ஹே அஸுர சிரேஷ்டர்களே! சிறிதும் பயப்படாமல் இந்த ஸன்யாஸியார்களை சீக்கிறமே அழித்துப் போடுங்கள். 24. குருவான சங்கரர் தன்னுடைய காரியங்களை ஸாதித்துக்கொடுப்பதில் ஸாமர்த்தியசாலிகளான மகாசூரர்களான இதர சிஷ்யர்களை இவ்வாறு ஆக்ஞையிட்டு அஸுரஸ்வபாவமுடைய மற்ற நான்குசிஷ்யர்களை சமீபத்திலழைத்து இவ்வாறு பேசினார். 25. சிஷ்யர்களே! பீஜாதன் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து எனக்கு இன்னமும் எவ்வளவு ஜன்மம்வந்து சங்கடப்படப்போகிறேன் என்பதைக்கேட்டுவந்து உடனே எனக்குச் சொல்லுங்களென்று சங்கரர் சொன்னார். அவர்கள் ஆகாயமார்க்கமாய் பத்துதிக்குகளிலும் சுற்றிவிட்டு சங்கரரிடம் வந்துசேர்ந்தனர். 26. பீஜாதனைக் கண்டுவந்தீர்களா? என்னுடைய கதி என்னவென்று அவன் சொன்னான்? என்று குருவான சங்கரர் கேட்க அவர்கள் இதர சிஷ்யர்களை வெளியே போகச்சொல்லி இரகசியமாய் அறிவித்தனர். 27. எங்கள் குருவுக்கு இனி என்னகதி வரப்போகிறது என்று நாம் பார்த்த ஒவ்வொருவரையும்கேட்டு வந்தோம். இப்படிக்கேட்டும் ஒருவரிடமிருந்தும் பதில்வரவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். அவர்களில் ஒரு

வன் இவ்வாறு சொன்னான். 28. குருவே! நான் ஓரிடத்தில் ஓர் பரச்சேரியின் சமீபத்தில் ஓர் பரையன் பந்தாடிக்கொண்டு இப்படிச்சொன்னான். சங்கரருக்கு இனி இரண்டுஜன்மங்களுண்டு. பத்மபாதருக்கு இனி ஒரே ஜன்மம்தான். எனக்கோ இனி ஒரு ஜன்மமுமில்லை. ஒருஜன்மமுமல்லை. ஒருஜன்மமுமில்லை. என்று சொல்லிக்கொண்டிருப்பதைக் கண்டேன். 29. என்றிவ்வாறு சொல்லவும் சங்கரர் ஹா பீஜாதா! பீஜாதா! நீ இவ்வாறு சண்டாளனைப்போல் உன் உருவத்தை மாற்றிக்கொண்டுவிட்டாயா? குழந்தாய்! நீ இந்த சங்கடத்தினின்றும் தப்பித்துக்கொண்டுவிட்டாய். நான் மறுபடியும் ஜன்மம் வரக்கூடிய விஷயானுபவங்களை ஏற்படுத்திக்கொண்டுவிட்டேன். ஐயோ! என்ன பலன் வரப்போகிறதோ! என்கதி என்னமோ! என்று புலம்பிக்கொண்டு எப்போதும் எழுந்திராத தூக்கமாகிய மரணத்தை அடைந்தார்.

ஏழாவது ஸர்கம் முடிந்தது.

---

## எட்டாவது ஸர்க்கம்.

1. காலடியில் பிறந்த மாயாவாதியான சங்கரரால் ஆக்ஞாபிக்கப்பட்ட அவர்களுடைய சிஷ்யர்களான ஞானோத்தமாதிகள் நந்திக்ராமமென்ற ஊருக்குச்சென்று அங்கிருந்த ப்ராக்ஞதீர்த்தாதி யதீசுவரர்களின் மடத்திற்கு நெருப்புவைத்து அதைக்கொளுத்தினர். 2. அஸுரர்களான அந்த சங்கர சிஷ்யர்கள் அவ்வூரிலிருந்த பசுக்களையும் குழந்தைகளையும்கூட பைரவி மந்த்ர வித்யையால் கொன்றனர். அப்படியே அந்த வித்யையைக்கொண்டு பிராம்மணர்களுக்கு ஜுரம் ஏற்படும்படி செய்தனர். அங்கிருந்த ஸ்திரீகளின் கற்பை அழித்தனர். 3 ப்ராக்ஞதீர்த்தருடையவும், அவருடைய சிஷ்யர்களுடையவும் தண்டகாஷ்டங்களையும் கமண்டலு முதலியவைகளையும் முறித்து உடைத்தெறிந்தனர். பிறகு அவர் தமது சிஷ்யர்களுடன்கூட ஜகந்நாத க்ஷேத்திரம் போய்விட உத்தேசித்து நந்திக்கிராமம் விட்டு ஓர்நாள் விடிவதற்கு முன்பே புறப்பட்டுவிட்டார். 4. இந்த விருத்தாந்தத்தைக்கேட்ட அந்த மாயாவாதிகள் அவர்களைப் பின்தொடர்ந்து ஓடிப்போய்



ஜனங்களின் நடமாட்டமில்லாத இடத்தில் அவர்களை மடக்கி கையாலும், கழியாலும் அவர்களை நன்றாய் அடித்து குப்புறத்தள்ளி அந்த பரமஹம்ஸர்களுக்கு உயிருக்கு ஹானியேற்படும்படிசெய்து பின்வருமாறு பேசினர். 5. எங்கள் மதமான அத்வைதமதத்தை நீங்கள் அனுஸரிக்கிறீர்களா அல்லது எங்கள் கையால் இப்பொழுது சாகப்போகிறீர்களா இவ்விரண்டில் ஒன்றை இப்பொழுதே நிஷ்கரித்துச் சொல்லுங்கள். என்றிவ்வாறு அந்த மூர்க்கர்களான மாயாவாதிகள் நிர்பந்தம்செய்யவும் அந்த ப்ராக்ஞதீர்த்தாதிகள் உயிருக்கு பயந்து அப்படியே நீங்கள் சொல்லுகிறபடியே உங்கள் அத்வைதமதத்தையே பின்பற்றுகிறோம். எங்களைக்கொல்லாமல் விட்டுவிடுங்கள் என்று அலறினர். 6. இவ்வாறு பிராக்ஞதீர்த்தாதிகள் அத்வைதமதத்தை ஆசிரயிக்க ஒப்புக்கொள்ளவும் கொடியனான அந்த ஞானோத்தமன் ப்ராக்ஞதீர்த்தாதிகளுக்கு புதிதாய் தண்டம் முதலியவைகளை தானே கொடுத்து அவர்கள் முன்னாடி வழக்கமாய் தரித்துக்கொண்டிருந்த கோபிசந்தன நாமம் பஞ்சமுத்திரைகளை அழிக்கச்செய்து விபூதி ருத்திராக்ஷம் திர்யக்புண்டரங்கள் இவைகளைத்தரிக்கச் செய்தான். அஸுரர்களின் மதமான அத்வைதமதத்தை பிறகு அவர்களுக்கு உபதேசம் செய்தான். 7. சமயோசிதமாய் ஆசார அனுஷ்டானங்களைச் செய்வதில் நிபுணர்களாய் மனதில் த்வைதஸித்தாந்தத்தை ஒளித்துவைத்துக்கொண்டு அந்த பரமஹம்ஸர்களான ப்ராக்ஞதீர்த்தாதிகள் துஷ்டயுக்திகள் நிறைந்த கடினமான சங்கரபாஷ்யத்தை அந்த மாயாவாதிகளிடமிருந்தே சிரவணம் செய்து அவர்களுக்கு பயந்து அதையே தன் சிஷ்யர்களுக்கு பாடம்சொல்லிவைத்தனர். 8. இவ்வாறு ப்ராக்ஞதீர்த்தாதிகள் மாயாவாதிகளை மோசம் செய்து அவர்கள் ப்ராக்ஞதீர்த்தாதிகளை எங்கள் சுவாதீனத்திற்கு கொண்டுவந்துவிட்டோம். அவர்களை விபூதி ருத்திராக்ஷாதிகளை தரிக்கச்செய்து எங்கள் மதஸ்தர்களாக்கிவிட்டோமென்று ஆனந்த பரவசர்களாய் மெய்மறந்திருக்கும்படிசெய்து ஆனந்தபால மடத்திலேயே மாயாவாதிகளுடன் வாசம்செய்திருந்தனர். 9. ப்ராக்ஞதீர்த்தாசாரியாள் அத்வைத உபாஸனையில் ஈடுபட்டிருப்பதாய் அவர்கள் நம்பினர். அவர்கள் தினமும் மாயாவாதத்தை பாடம்

சொல்லிவருவதையும் கண்டு அடிக்கடி அவர்களின் மனம் பூரித்தது. 10—11. ஆனால் ப்ராக்ஞதீர்த்தர் அவர்களுடைய சிஷ்யர்களுடன் ப்ரசஸ்தமான ஆசாரங்களை அனுஷ்டித்துவருவதைப் பார்த்தனர். இந்த மாயாவாதிகள் மத்யாதிகளின் பானங்கள், விஷயாதிகளின் போகங்கள் ஸ்திரீஸௌகம் முதலியவைகளை விரும்பியவர்களாய், இந்த ப்ராக்ஞதீர்த்தாசாரியாளோ சதாசாரஅனுஷ்டானத்தில் வெகுமுரடராயிருக்கிறார், அவருக்கு நாம் குருவாயிருந்து மேற்கண்டபடி துராசாரங்களைச் செய்தால் எங்களை அவர் கட்டாயம் நிந்திப்பார்; ஆதலால் நாம் அவருடன் இருப்பது தகாது என்று ப்ராக்ஞதீர்த்தாதிகளுடன் இருக்க பயந்து, ப்ராக்ஞதீர்த்தரைவிட்டு ஆனந்தபாலமடத்திலிருந்து மெதுவாய் ஒருவர்பின் ஒருவராய் சாக்குபோக்கு சொல்லி வெளியே கிளம்பிவிட்டனர். 12. அவர்கள் எல்லோரும் போனபின் ப்ராக்ஞதீர்த்தர் தம்முடனிருந்த தமக்கு அனுகூலமான சிஷ்யர்களை கூப்பிட்டு இவ்வாறு இரகசியமாய்ப் பேசினர். மாயாவாதிகள் எல்லோரும் இவ்வாறு எங்களைவிட்டு புறப்பட்டுப்போனது பகவான் நாராயணன் எங்களிடம் செய்த மகத்தான அனுக்ரஹமே ஆகும். 13. பர்பராஜாதியர்களைப்போல் க்ரூரர்களான எல்லா மாயாவாதிகளும் எங்களை விட்டுவிட்டு போய்விட்டனர். இனி எங்களுக்கு க்ஷேமம்தான். ஆகவே நாம் இந்தமடத்திலேயே தங்கியிருந்து சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை முடித்துக்கொண்டு பிறகு இவ்வூர்விட்டு முன்னடிபுறப்பட்டுப்போவோம். 14. இங்கிருந்து கங்காதீரம் சென்று அங்கு கங்கையில் ஸ்நானம் செய்து மாயாவாதிகளுடன் சேர்ந்ததாலுண்டான பாபத்தை அந்தகங்காஸ்நானத்தால் பரிகாரம் செய்துகொண்டு நாங்களும் மாயாவாதிகளென்றே வெளிக்கு விபூதி ருத்திராக்ஷதாரணாதிகளால் காட்டிக்கொண்டு கிரமமாய் மெதுவாய் திரும்பவும் எங்கள் பூர்வீகமான நந்திக்ராமத்திற்கே சென்றுவிடுவோம். 15. இப்படி ப்ராக்ஞதீர்த்தர் சொல்லி சாதுர்மாஸ்யத்தை அங்கேயே முடித்து தன் சிஷ்யர்களுடன் ஆனந்தபாலமடத்தைவிட்டு கங்காதீரம்சென்று அங்கு கங்காஸ்நானம் செய்துகொண்டு வடக்கே புறப்பட்டார்.

(தொடரும்)



# ஆசாரமாலை.

(முன் தொடர்ச்சி.)

பிறகு சங்கமுத்திரையை எடுத்து "பாஞ்சஜன்ய நிஜத்வான த்வஸ்தபாதக ஸஞ்சய| பாஹிமாம் பாபினம் கோரம் ஸம்ஸாரார்ணவ பாதினம் என்று ப்ரார்த்திக்கவேண்டும். அடியிற் கண்டவாறு சங்கமுத்திரையை போட்டுக்கொள்ளவேண்டும். இடது பொட்டில் (கண்டத்தில்) ஒன்றும் வயிற்றின் நாமங்களில் இடது புறமுள்ள நாமத்தின் மேல் பாகத்தில் இரண்டு சங்கு முத்திரைகளும், இடது ஸ்தனப்ரதேசத்தில் ஒன்றின்மேலொன்றாக மூன்று முத்திரைகளும். இடது புஜத்து நாமத்தின் இரண்டு பாரிசுவங்களிலும் இரண்டு முத்திரைகளும், வலது புஜத்தின் நாமத்தின் கீழே ஒரு முத்திரையையும், கழுத்தின் இடது புரத்தின் நாமத்தில் ஒன்றும் தரித்துக் கொள்ளப்படவேண்டும். பிறகு கதா முத்திரை எடுத்து "ப்ரம்மாண்ட புவனாரம்பேமூலஸ்தம்போ கதாதர:| கௌமோதகீகரேயஸ்ய தம் நமாமிகதாதரம்" என்று ப்ரார்த்தித்து அடியில் கண்டவாறு நாமங்களில் தரிக்கப்படவேண்டும். நடுநெற்றியில் ஒன்றும்; வயிற்று நாமங்களில் வலது நாமத்தின் மேற்புரத்தில் ஒன்றும், இடது ஸ்தனப்ரதேசத்தில் ஒன்றும், இடது புஜத்து நாமத்தின் இரண்டு பாரிசுவங்களில் ஒவ்வொன்றும் தரிக்கப்படவேண்டும். பிறகு பத்ம முத்திரையை எடுத்து ஸம்ஸாரபய பீதானாம் யோகினாமபயப்ரத:| பத்மஹஸ்தேன யோதேவோ யோகீசம் தம் நமாம்யஹம்|| என்று அந்த முத்திரையை ப்ரார்த்தித்து அடியிற் கண்ட இடங்களில் போட்டுக் கொள்ளவேண்டும். ஹிருதயத்தின் நாமத்தின் மேல்புரம் ஒன்றும், வலது பாரிசுவத்தில் ஒன்றும், வலது ஸ்தனத்து நாமத்தின் மேல்புரத்தில் ஒன்றும், வலது புஜநாமத்தின் இரண்டு பக்கத்திலும் இரண்டு முத்திரைகளும் தரிக்கப்படவேண்டும். பிறகு நாமமுத்திரையை எடுத்து "நாராயண நமஸ்தேஸ்து நாமமுத்ராங்கிதம் நரம்| த்ருஷ்ட்வைவலபதே முக்திம் சாண்டாளோ ப்ரம்மகாதக:||" என்று ப்ரார்த்தனை செய்து ஒவ்வொரு புஜத்து நாமத்திலும் நான்கு முத்

திரைகளையும், மற்ற ஒவ்வொரு நாமத்திலும் ஒவ்வொரு முத்திரையையும் போட்டுக் கொள்ளவேண்டும். பிராம்மணன் யக்ஞோபவீதத்தை தரிக்கவேண்டியது எப்படி அவசியமோ அப்படித்தான் பகவானுடைய ஆயுதங்களான சங்கசக்ராதி முத்திரைகளின் அடையாளங்களை தரித்துக்கொள்ளவேண்டிய தவசியமாகும். ப்ராண ப்ரதிஷ்டையடைந்த பஞ்சமுத்திரைகளைக்கொண்டுதான் கோபிசந்தனத்தால் நாமங்களில் முத்திரைகளைப்போட்டுக்கொள்ளவேண்டும். இல்லாவிடில் நிஷ்பலமே ஆகும். செய்த நற்காரியங்களும் வீண்தான். முத்திரைகளைப் போட்டுக்கொண்டபின் அவைகளை ஜலம் விட்டு அலம்பி அந்த ஜலத்தை தலையில் மார்ஜனம் செய்துகொள்ள வேண்டும். அப்பொழுது நமோமுத்ரேப்ய: என்று மந்திரத்தைச் சொல்லவேண்டும். முத்திரைகளை தரையில் வைக்கலாகாது. முத்திரைகளைப் போட்டுக் கொள்வதால் அவைகள் ஞானம் முக்தியைத் தருகின்றனவென்று ஆக்னேய புராணம் அறிவிக்கிறது.

துளஸீமணி. பிறகு துளஸீமணி மாலையை தரித்துக் கொள்ளவேண்டும். துளஸீமணி, நெல்லிக்காய்மணி. கமலக்காய்மணி இவைகளின் மாலையை வைஷ்ணவர்கள் தரிக்கவேண்டியதவசியம். துளஸீம்ணி கமலாக்ஷமணி இரண்டையும் சேர்த்து தரித்துக்கொண்டால் பூமியையும் ஐசுவரியத்தையும் அடைவான். நெல்லிக்காய்மணி மாலை, துளஸீமணி மாலை, யாருடைய கழுத்தில் காணப்படுகிறதோ அவன் பாகவதோத்தமனாவான். அவைகள் அவனுடைய சரீரத்திலுள்ள உரோமத்தில் எத்தனை காலம் ஸம்பந்தமடைகிறதோ அத்தனை ஆயிரம் வருடங்கள் அவன் வைகுண்டத்தில் ஸ்ரீஹரியின் சமீபத்தில் வசிக்கின்றான். இந்த நெல்லிக்காய்மணி துளஸீமணி எத்தனைகாலம் இவனுடைய சரீரத்திலிருக்கின்றனவோ அத்தனை காலம் அவனுடைய சரீரத்தில் பகவான் சந்தோஷமாய் வசிக்கிறார். நெல்லிமணி துளஸீமணியை கழுத்தில் தரித்துக்கொண்டவன் ஆகாரமற்றவனாயினும், சௌசமில்லாதவனாயினும், என்னைத்தான் அடைவான். இதில் சந்தேகமில்லை என்று விஷ்ணுதர்மோத்தரத்தில் பகவான் சொல்லிக் கொண்டிருக்கிறார். துளசி காஷ்டத்தால் செய்யப்பட்ட மணிகளையும் தாமரைமணிகளையும் நல்ல ஸ்திதியை அபேக்ஷிப்பவன் எப்பவும் தரிக்கவேண்டும்.

(தொடரும்.)



# வேதாந்த துணுக்குகள்.

(முன் தொடர்ச்சி.)

பகவானுடைய எல்லா அவதாரங்களும் எல்லா இடங்களிலுமிருக்கின்றன. இன்ன இடங்களிலுண்டு இன்ன இடங்களிலில்லை என்பது இல்லை. மகாலக்ஷ்மிமுதற்கொண்டு எல்லா சேதனர்களிலேயும் எல்லா ஜடங்களிலேயுமிருக்கின்றன. அவைகள் எல்லாமே ஜகத் சிருஷ்டியாதிகளைச்செய்ய சக்தி படைத்தவர்கள். ஆயினும் சில ரூபங்கள்தான் பகவானுடைய இச்சையால் சிருஷ்டியாதிகளைச்செய்கின்றன. எல்லா ரூபங்களும் வெகு அழகானவைகள். திவ்யமான அநந்த லக்ஷணங்கள் படைத்தவைகள். முப்பத்திரண்டு லக்ஷணங்கள் மட்டில் பகவானிடம் உண்டு. அவைகளைவிட விலக்ஷணமான இன்னமும் மற்ற அநந்த லக்ஷணங்களுண்டு. மகாலக்ஷ்மி முதலியவர்களிடம் அந்த லக்ஷணங்களில்லை. பகவானிடம் சுக்லம், ரக்தம் முதலான கணக்கற்ற பலவகை வர்ணங்கள் உண்டு.

ஃ ஃ ஃ ஃ ஃ ஃ

ராமர், கிருஷ்ணர், வியாஸர், கபிலர் முதலான பகவத் ரூபங்களில் ஒவ்வொன்றும் அநந்தமாக இருக்கின்றன. ஸ்ரீராமர் யுத்த காலத்தில் அநந்த ராமர்களாய் காட்டியிருக்கிறார். அப்படியே ராமரூபங்களிலேயும் ராமராமர், ராமகிருஷ்ணர், ராமவ்யாஸர் என்று அநந்த ரூபங்களுண்டு. அப்படியேத்தான் கிருஷ்ணரூபங்களிலேயும். கிருஷ்ண கிருஷ்ணன், கிருஷ்ண ராமர், கிருஷ்ண வ்யாஸர் என்று அநந்த ரூபங்களுண்டு. ஜாம்பவான் கிருஷ்ண ரூபத்தில் ராமனைக்கண்டான். இப்படி ஒவ்வொரு ரூபத்திலும் அநந்தமான ரூபங்களின் ப்ரபேதமுண்டு. இப்படி ரூபங்கள் வெளியாவதால் மூலரூபத்தில் குறைவு என்பதில்லை. பகவானுடைய அம்சரூபங்களுக்கும். அநந்தமான அம்சங்களுண்டு.

... ... ... ... ... ...

பகவானுடைய ஞானத்திற்கும், பகவானுக்கும் பேதமில்லை. பகவானுடைய ஆனந்தத்திற்கும் பகவானுக்கும் பேதமில்லை. பகவானுடைய ஞானத்திற்கும், பகவானுடைய ஆனந்தத்திற்கும் பேதமில்லை. பகவானுடைய அசிந்த்யமான ஐசுவரியத்தால் அவை தனியாக வியவஹரிக்கப்படுகின்றன. பகவானுடைய குணங்களுக்கும் ஜகத் சிருஷ்டியாதிகர்த்ருத்வம் உண்டு. அவைகளும் மகாலக்ஷ்மிக்கு பதியே. பகவானுடைய காரியங்களுக்கும் பகவானுக்கும் அப்படியேதான் பேத

மில்லை. அவை எப்பொழுதும் எந்த இடங்களிலேயும் வெளியானவைகளாகவே இருக்கின்றன. பகவானிடம் விருத்தமான தர்மங்களுமிருக்கின்றன. பகவான் அணுவாகவும் இருக்கிறார். அப்படியே மகத்தாகவுமிருக்கிறார். அணுவென்றால் அணுபானம் எத்தனை பதார்த்தங்களுண்டோ அவை எல்லாவற்றிலும் அணுவாக இருக்கிறார். பெரிய பதார்த்தங்களைவிட பெரியராகவுமிருக்கிறார். அப்படியே பிரம்மாண்டமாய் பளுவாக இருக்கிறார். வெகு லகுவாகவுமிருக்கிறார். வெகு சமீபத்திலும் இருக்கிறார். வெகு தூரத்திலுமிருக்கிறார். என்றால் விருத்தமான இப்பேர்ப்பட்ட தர்மங்கள் அவரிடத்தில் இருக்கின்றன. ஆகவே அலர் அசிக்த்யாத்யத்புத சக்தியுள்ளவர். அவர் பரமைசுவரியம் படைத்தவராதலால் இந்த தர்மங்கள் அவருக்கு பொருந்தும்.

* * * * * * * *

பகவானிடம் தோஷங்களென்பதே இல்லை. இதராளுக்கு தோஷமாயுள்ளவை பகவானிடம் குணங்களாகவே ஆகின்றன. எப்படியெனில் அதிகமாய் சாப்பிடுவது இதராளுக்கு தோஷம். பகவானுக்கு அது குணமாகிறது. ஆகவே அவரிடம் தோஷமே ஏற்பட நியாயமில்லை. சூரியனிடம் இருள் ஏற்பட நியாயமில்லை. மூலரூபி பகவானைப்போலவே பகவானுடைய அவதாரங்களுக்கும் தோஷமென்பதில்லை.

● ● ● ● ● ●

பகவானுக்கும் அவருடைய அவயவங்களுக்கும் பேதமில்லை. என்றால் பகவானுடைய உருப்புக்களே பகவானுடைய காரியங்களைச் செய்யும். பகவானுடைய தலைமயிர்தான் கிருஷ்ணர் என்பது பிரசித்தம். பகவானுடைய வாக்கு பரசுராமர், மூக்கு நரஸிம்ஹர், இப்படி அவருடைய நகம், கேசம் எல்லாம் பரிபூர்ணமே. பகவானுக்கு எவ்வளவு குணங்களுண்டோ அவ்வளவும் அவைகளுக்கு உண்டு. பகவான் இன்ன அவயவத்தால் இன்னது செய்வாரென்றில்லை. காலால் எண்ணலாம். மனதால் நடக்கலாம். கேசத்தால் சாப்பிடலாம். அவருடைய மகிமை அற்புதமானது.

ஃ ஃ ஃ ஃ ஃ ஃ

பிரம்மாதிகள் ஸ்வரூபத்தாலேயே எப்படி புருஷர்களோ லக்ஷ்மீ முதலானவர்கள் ஸ்வரூபத்தாலேயே எப்படி ஸ்திரீகளோ அப்படி பகவான் ஸ்வரூபத்தாலேயே புருஷருமாவார். ஸ்திரீயுமாவார். புருஷரென்றுமட்டிலல்ல. அல்லது ஸ்திரீ என்றுமட்டிலுமல்ல.



பகவானுடைய ஸ்திரீ ரூபங்கள் பகவானுடைய புருஷ ரூபங்களுடன் சந்தோஷிக்கின்றன. ஸ்திரீ ரூபங்களே புருஷ ரூபங்களாயும் மாறுகின்றன. பகவான் அர்த்த நாரீசுவரராய் இருக்கின்றார். இடது பாகத்தில் ஸ்திரீ அம்சமும், வலது பாகத்தில் புருஷ அம்சமும் உண்டு. மகாலக்ஷ்மியுடன் பகவான் அவரிடமுள்ள கருணையால் ரமிக்கிறார். அப்பொழுதும் மகாலக்ஷ்மியிடமுள்ள தன் ஸ்திரீ ரூபத்துடன் பகவான் ரமிக்கிறார்.

* * * * * *

மகாலக்ஷ்மி பிரம்மாதிகளைவிட கோடிமடங்கு குணங்களதிகமாயுள்ளவள். ஆனந்தாதி அனந்தகுணங்களுண்டு. அவள் பகவானிடமிருந்த தனியாயுள்ளவள். ஆனால் அவருக்குமட்டில் அதீனமாயுள்ளவள். இதுவே மகாலக்ஷ்மியின் லக்ஷணமாகும். பிரம்மாதிகளைவிட அவள் உத்தமள். அவள் பரமாத்மாவைப்போல் பந்தமில்லாதவள். அவள் நித்ய முக்தளாவாள். அநாதிகாலம் முதற்கொண்டு அவள் பகவானுடன் சேர்ந்திருப்பதால் அவள் அவ்வாறு இருக்கிறாள்.

● ● ● ● ● ●

மகாலட்சுமி பகவானைப்போல் அநேக ரூபங்களுள்ளவள். ஸ்ரீ, பூ, துர்கா, அம்பரணீ, ஹ்ரீ, மகாலட்சுமி, தக்ஷிணா, ஸீதா, ஜயந்தி, ஸத்யபாமா, ருக்மணி முதலான பல ரூபங்களுண்டு. பகவானைப்போல் மகாலட்சுமிக்கு மாமிஸம் மேதஸ் முதலானவைகளைக்கொண்ட ப்ராகிருத சரீரமில்லை. ஞானானந்தாதி சரீரமுள்ளவள். எல்லா ரூபங்களிலும் தக்ஷிணா என்ற ரூபத்திில்தான் பகவானுக்கு விசேஷமான ஸுகமுண்டு.

ஃ ஃ ஃ ஃ ஃ ஃ

மகாலட்சுமி பகவானைப்போல் எல்லா சப்தங்களாலும் குறிக்கப்படுகிறாள். அவள் பகவானைப்போல் தேசத்தாலும், காலத்தாலும் வியாப்தமானவள். ஆனால் குணங்களால் பகவானைவிட குறைந்தவள். பகவானைப்போலவே அவளுக்கு ஜகத் சிருஷ்டியாதி மகாமகிமைகளுண்டு. பிரம்மாதி எல்லா தேவர்களின் பதவிகள் மகாலட்சுமியின் அதீனம். எல்லா தேவர்களும் இவளை எப்பொழுதும் ஸேவிக்கின்றனர். ஸம்ஸாரம், முக்தி எல்லாவற்றிலுமே இவர்களை மகாலட்சுமி சம்ரக்ஷிக்கிறாள். எந்த காரியமும் மகாலட்சுமியால் நடக்கிறது. அவளன்றி ஒன்றும் நடவாது. அவளுக்கு நாராயணனன்றி யாதொன்றும் நடவாது. அவளுக்கு அநந்த தலைகள், அநந்த கண்கள், அநந்த கால்கள், அநந்த கைகளுண்டு. அவள் எல்லாவற்றையும்விட மகத்தானவள். எல்லாவற்றையும்விட அணுவானவள். இப்படி விருத்தமான அநந்தமான ரூபங்களுள்ளவள்.

(தொடரும்).

# செய்தித்திரட்டு.

---

ஹரித்வாரத்திற்கப்பால் பதரிகாசிரமத்திற்குப் போகும் மார்க்கத்திலுள்ள ஆதிக்ஷேத்திரமாயும் சுத்தகங்காதீரத்திலுள்ளதுமான ஸ்ரீ ஹ்ருஷீகேசக்ஷேத்திரத்தில் ஸ்ரீகுரு ராகவேந்திரஸ்வாமிகளின் பிருந்தாவனத்தை பிரதிஷ்டை செய்ய உத்தேசித்து அவ்வூரில் கங்காதீரத்தில் ஓர் ரமணீயமான இடம் வாங்கப்பட்டிருப்பதாகவும், நல்ல கருப்பு சிலையில் முன்னூறு ரூபாய் செலவில் ஓர் பிருந்தாவனமும் பெங்களூரில் தயார் செய்யப்பட்டிருக்கிறதென்றும், வெகு சீக்கிரமே அது அந்த புண்யக்ஷேத்திரத்திற்கு கொண்டுபோகப்பட்டு அங்கு ப்ரதிஷ்டை நடக்கப்போகிறதென்றும், ஆங்காங்குள்ள நூற்றுக்கணக்கான பக்தர்கள் இந்த மகாகாரித்திற்கு பொருளுதவி செய்திருக்கின்றனரென்றும், ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடாதிபதிகளான காலஞ்சென்ற ஸ்ரீஸுவ்ரதீந்திர தீர்த்தஸ்வாமிகளும் சரியே, தற்போதுள்ள ஸ்ரீஸுயமீந்திரதீர்த்தஸ்வாமிகளும் சரியே, தனக்கு இந்த காரியத்திற்கு பொருளுதவி செய்ய ஸ்ரீமூகம் தந்திருக்கின்றனரென்றும், இவ்வாறு கங்காதீரத்தில் பிருந்தாவன ப்ரதிஷ்டை செய்ய ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் ஆக்ஞை ஏற்பட்டிருக்கிறதென்றும், இன்னமும் ஸ்வல்பதுகை வேண்டியிருப்பதால் அதை சேகரிக்க சீக்கிரமே இத்தென்னாட்டில் சஞ்சரிக்கப்போவதாயும், ஸ்ரீபிருந்தாவனத்திற்கு சாசுவதமாய் ஹஸ்தோதகாதிகள் நடந்துவர சுமார் 4000 ரூபாய் பொருமானமுள்ள தன்னுடைய ஆஸ்தியைதான் ஒதுக்கிவிட்டிருப்பதாயும், ஆங்காங்குள்ள ஸ்ரீராகவேந்திரரின் பக்தர்கள் தங்களாலியன்றவளவு காணிக்கைகளை அடியிற்கண்ட விலாஸத்திற்கனுப்பி ஸ்ரீ ராகவேந்திரரின் பிருந்தாவனம் ஹிமாலயப்ராந்தியத்தில் பரமபாவனமான பதரிகாரண்யத்தில் உத்தமமான கங்காதீரத்தில் ஸ்தாபிக்கப்பட்டு பக்தகோடிகளால் சேவிக்கப்பட்டு பாதகண்டம் முழுவதும் எல்லா ஜாதியினர்களாலும் கொண்டாடப்பட்டு மானிட வர்க்கத்திற்கே ஸர்வாபீஷ்டங்களை தந்தருள்பவராய் விளங்கச்செய்ய எல்லோரையும் ப்ரார்த்திக்க கேட்பதாயும் ஸ்ரீமான் தளவாபட்டனம் D. நரஸிம்மாசாரியார் மதுரை பீமவிலாஸத்திலிருந்து அறிவிக்கிறார்.

பம்பாயிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த மாத்வர்களின் ஆங்கில பத்திரிகையான மத்வமஹிதாஸா பத்திரிகையின் பழைய சந்தாதாரர்கள் பாக்கி சந்தாதுகையையனுப்ப எவ்வளவு கடிதங்களும், விண்ணப்



பங்களும் எழுதியும் பயன்படவில்லையாதலால் அப்பத்திரிகையை நடத்துவது இனி ஸாத்யமில்லை என்றும், நாளது நவம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில் ஸெப்டம்பர், அக்டோபர் இந்த மாதத்தின் சஞ்சிகைகளுக்காக 40 பக்கங்களைக்கொண்ட ஓர் சஞ்சிகையும் பின்பு வழக்கப்படி அதன் தொடர்ந்த சஞ்சிகைகளும் வெளிவராமலிருக்கும்பக்ஷத்தில் 6-வது வாலியத்திற்காக அட்வான்ஸ் துகைகளை அனுப்பியவர்கள் செலவடையாத துகைகளை வாபீஸ் பெறுவார்களென்றும் இதனால் அப்பத்திரிகை நின்றுபோய்விட்டதாய் நிச்சயிக்கலாமென்றும் அப்பத்திரிகையின் மானேஜிங் எடிட்டர் பம்பாயிலிருந்து 28—9—33உ இப்பத்திரிகைக்கனுப்பிய அறிக்கையிலிருந்து வெளியாகிறது.

---

# விளம்பரம்.

---

## இன்னமும் இரண்டே மாதம்தான்.

மிக்க குறைந்தவிலை! அரிய சமயம்!!

மாத்வமித்திரன் வாலியங்களை பூரா சேகரித்துவைக்க இதுபோன்ற சமயம் இனி கிடைப்பதரிது. சொற்பகாபிகள்தான் கைவசத்திலிருக்கின்றன. இவை செலவடைந்தபின் பிந்தி இந்த வாலியங்கள் எக்காரணத்தைக்கொண்டு பிரசுரிக்கப்படமுடியாதாதலால் மாத்வமித்திரன் வாலியங்களில் சிலவற்றைமட்டில் வாங்கியவர்கள் தற்போதே இவைகளைப் பெறக்கேட்டுக்கொள்ளுகிறோம்.

| முன்பணமாய் மணியார்டர் செய்கிறவர்களுக்கு, | | V. P.-யில் அனுப்ப ஆர்டர் செய்கிறவர்களுக்கு, |
|---|---|---|
| I வாலியம் | 1—8—0 | 2—0—0 |
| II வாலியம் | 1—8—0 | 2—0—0 |
| III வாலியம் | 1—0—0 | 2—0—0 |
| IV வாலியம் | 1—0—0 | 2—0—0 |
| V வாலியம் | 1—0—0 | 2—0—0 |
| பிரதி வாலியத்திற்கும் தபாற்கூலி அணா 8. | | பிரதி வாலியத்திற்கும் தபாற்கூலி அணா 8. |

தபாற் கூலியையும் சேர்த்து அந்தந்த வாலியத்தின் கிரயத்தை முன்பணமாய் மணியார்டர் செய்யவேண்டும். புஸ்தகங்களை ரிஜிஸ்டர்

போஸ்ட் மூலமாகவோ அல்லது Certificate of Posting மூலவாகவோ இப்பத்திரிகாலயத்தின் மானேஜரின் அபிப்பிராயத்துக்குத் தகுந்தபடி அனுப்பப்படும். எமது ஆபீசிலோ அல்லது எஜண்டிடமோ நேரில் வாங்கிக்கொள்பவர்களுக்கு தபாற்கூலி இல்லை.

மானேஜர், மாத்வமித்திரன்.
ஸ்ரீவியாஸவிலாஸம், வியாஸராயர் அக்கிரஹாரம்,
கும்பகோணம்.

எமது எல்லா பிரசுரங்களும் மாத்வமித்திரன் பழைய வாலியங்களும் நாம் கொடுக்கும் விலைக்கே அடியிற்கண்ட விலாஸதாரிடம் கிடைக்கும்.

K. நாராயணாசாரியார்,
மாத்வமித்திரன் ஏஜண்டு, ஆண்டாங்கோயில்,
(Via) கரூர்.

---

## விசேஷதினங்கள்,

### கார்த்திக மாஸம்.

| | | |
|---|---|---|
| 20—10—33 | சுக்ரவாரம் | ப்ராத்ருத்வதியை. |
| 21—10—33 | சனிவாரம் | பகுனித்ருதியை |
| 27—10—33 | சுக்ரவாரம் | சிரவணம், உபவாஸம் இல்லை, விஷ்ணு பஞ்சக உபவாசம் இல்லை. |
| 28—10—33 | சனிவாரம் | விஜயதாஸர் புண்யதினம். |
| 29—10—33 | பானுவாரம் | ஏகாதசி. உத்தான ஏகாதசி. |
| 30—10—33 | சோமவாரம் | உத்தான த்வாதசி துளசி விவாஹம், மாலை க்ஷீராப்தி பூஜை. |
| 2—11—33 | குருவாரம் | பௌர்ணமி, விஷ்ணுபஞ்சக உபவாஸம், கார்த்திக ஸ்நானபூர்த்தி, வனபோஜனம், சாதுர்மாஸ்ய பூர்த்தி. |
| 14—11—33 | மங்களவாரம் | ஏகாதசி. |
| 15—11—33 | புதவாரம் | துலாஸ்நானப்பூர்த்தி. |
| 17—11—53 | சுக்ரவாரம் | அமாவாசை, விஷ்ணு பஞ்சக உபவாஸம். |

208709


## மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே. ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாஸமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும். எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும். பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும். பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

## SRI RAGHU VILAS, MADURA.

A fully equipped Hotel famous for its cleanliness,
Superiority and palatial surroundings noted
for its up-to-date Varieties with
first-rate preparations.

*R. Bindumathava Rao, Proprietor.*

ஸ்ரீ ரகுவிலாஸ் காப்பி ஹோட்டல்,
20 டவுன்ஹால் ரோடு, மதுரை,
R. ரகூத்தமராவ் மானேஜர்

---

## சக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான டாக்டர் பேரியாராவின் ஹூபிங் காப் ஸ்பெஷிபிக் இருக்கையில் 3மாதாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள். ஓர் பாட்டில் ரூ. 2—12—0

ஆஸ்த்மா க்யோர் இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து. ஓர்பாட்டில் ரூ. 4—8—0

ஆண்டிடயாபிடின் இது நீரழிவை நிச்சயமாய் 6மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும். ஓர்டின் ரூ. 4—12—0

ஆர்டருடன் ரூ. 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்பவும்

PEREIRA & Co., Chemists No.1 3, Calicut. (S. India).

# டி. எஸ். ஆர்.

அண்டு

# கம்பெனி,

## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 — தந்திவிலாஸம் "கோகுல்"

எங்கள் வாஸனுதிரவியசாலையில்
தயாரித்து விற்பனைக்குதயாராக
இருக்கும் ஸாமான்களின் விபரம்

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கரி ஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித் தைலம்

அரைக்கீரைவிதைத் தைலம்.

மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்


Printed at Sri Venkateswar Printing Works and
Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam